www.penakural.com மலர்: 02 இதழ்: 08 ஜூன் 2024 விலை: ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

தமிழ் மாத இதழ்

RNI No.:
TNTAM / 2022 / 85375



## மூன்றாவது முறை பிரதமராக பதவியேற்றுள்ள பிரதமர் மோடி, உலகநாடுகளின் தலைவர்களிடமிருந்து வாழ்த்து!



## 40/40 நன்றி தெரிவித்தார் முதலமைச்சர் ஸ்டாலின்



## பெயர் சொல்லி அழைக்கும் யானைகள்!

சமீபத்திய ஆய்வு

**போக்குவரத்து விதிமீறலில் ஈடுபடும் அனைத்து வாகனங்களையும் பறிமுதல் செய்யவேண்டும்: தமிழ்நாடு அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு**


Subzero Cool Tech
AC REPAIR SERVICE & RENT
AT YOUR DOOR STEP
AC REPAIR
INSTALLATION
MAINTENANCE
AMC SERVICE
We Repair all Brands
Uninstallation
Gas Filling
Air Duct Cleaning
HIGH QUALITY PREMIUM
OPERATIONAL SERVICE
CONTACT US
Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil, Mettukuppam,
Chennai - 600097.
SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

# பேனா குரல்

**PENA KURAL**

தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 02 இதழ்: 08 ஜூன் 2024

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-



உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர்:
**நா வீ சிவசங்கர்**

ஆசிரியர் : **ராதிகா.S**, B.E.,

கௌரவ ஆசிரியர் : **K.ராமசுப்ரமணியன்**

துணை ஆசிரியர்கள்:
**துரை. சந்துரு, ந.மதிவாணன், K.ரமேஷ்குமார், K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின் பா.கார்த்திகேயன், B.நாராயணசாமி**

தலைமை நிருபர்கள்:
**B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், ம.திலிப் குமார், பா.சரவணன், K.மாரிதுரை, A.தங்கராஜ், V.கண்ணபிரான்**

நிருபர்கள்:
**Ba.சரவணன், தமிழ்மணி, கா.கலைமணி, தி.பாமா, அன்பு மணி, S.பிரகாசம், இளைய தர்ஷினி, பா.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், கா.சுபுலட்சுமி**

புகைப்பட நிருபர்கள்:
**வா.கவியரசன், கா.மிதுன் சாய்**

சட்ட ஆலோசகர்கள்:
**M. குணசீலன்**, B.Com.,M.L.,
**G. சத்தியநாராயணன்**, B.A., L.L.B.,

இதழ் வடிவமைப்பு:
*Tamilni Printz & Graphics* - 8754582123



நிர்வாக அலுவலகம்:
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com



* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.*


தலையங்கம்

ஆசிரியர் குரல்

# மெத்தனால் விற்பனையில் கட்டுப்பாடு தேவையா?

தமிழ்நாட்டையே உலுக்கியுள்ள கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய நிகழ்வு தமிழ்நாட்டில் நடந்த மிகப்பெரிய கள்ளச்சாராய மரணமாக உள்ளது.

”உடல் உழைப்பு மிகுந்த வேலைகளைச் செய்யும் தொழிலாளர்கள் உடல் வலிக்காக தினமும் மது அருந்த விரும்புகின்றனர். தினசரி 300- 400 ரூபாய் சம்பாதிக்கும் ஒரு தொழிலாளி, டாஸ்மாக் கடைக்குச் சென்று 120 முதல் 150 ரூபாய் செலவழித்து மதுபானம் அருந்த விரும்புவதில்லை. அதற்குப் பதிலாக பாதி விலையில் சாராயம் குடித்துவிடலாம் என நினைக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் 5,329 டாஸ்மாக் மதுபான கடைகள் இருந்தபோதிலும், கள்ளச்சாராய விற்பனை இன்னும் தொடர பல காரணங்கள் உள்ளன.

ஒன்று இதன் விலை. ஒரு பாக்கெட் சாராயத்தின் விலை 50 ரூபாய் மட்டுமே என்பதால், பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களின் விருப்பமாக இது உள்ளது. மற்றொன்று, அதிகாலை முதல் நள்ளிரவு வரை எப்போதுமே கிடைக்கும் என்பதாலும், டாஸ்மாக் கடைகளில் அதிக விலைக்கு மதுபானம் வாங்க முடியாத பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் உள்ள இவர்கள், இதுபோன்ற கள்ளச்சாராயத்தை நோக்கிச் செல்கின்றனர்.

“இந்தப் பகுதியில் சாராயம் விற்பது அரசியல்வாதிகள், காவல்துறையினர் என எல்லோருக்கும் தெரிந்துதான் நடக்கிறது. இதுபோல விபரீதம் நடந்ததும் எல்லோரும் இது குறித்துப் பேசுகிறார்கள்.

தமிழ்நாட்டில் மொத்தமாக 11 மெத்தனால் தயார் செய்யும் தொழிற்சாலைகள் உள்ளன. பெரும்பாலான கள்ளச்சாராய சாவுகளுக்கு, அவற்றில் மெத்தனால் கலக்கப்படுவதே காரணமாக இருப்பதால் கடந்த 2002-ஆம் ஆண்டு மெத்தனாலின் பயன்பாடு, தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் (1937)-இன் கீழ் கொண்டு வரப்பட்டது. மெத்தனால் விநியோகத்தைக் கட்டுப்படுத்த, 1959-ஆம் ஆண்டின் தமிழ்நாடு டீ நேச்சர்ட் ஸ்பிரிட், மெத்தில் ஆல்கஹால் மற்றும் வார்னிஷ் விதிகளிலும் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இருந்தபோதும், கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் இந்த அபாயகரமான வேதிப்பொருள் ஏதோ வழியில் தொடர்ந்து கிடைத்து வருகிறது.

சாராயத்தை உட்கொள்வதால் ஏற்படும் தீமைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை தொடர்ந்து ஏற்படுத்த வேண்டும் என்பது சமுக ஆர்வலர்களின் வேண்டுகோள்.

– ராதிகா சிவசங்கர், ஆசிரியர்

# மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்றுள்ள பிரதமர், உலகநாடுகளின் தலைவர்களிடமிருந்து வாழ்த்து!

மூன்றாவது முறையாக இந்தியப் பிரதமராக பதவியேற்றதை யொட்டி வாழ்த்து தெரிவித்த உலகநாடுகளின் பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரி-வித்தார்.



சமூக ஊடக 'எக்ஸ்' தளத்தில் உலகநாடுகளின் தலைவர்கள் அனுப்பிய செய்திகளுக்கு திரு மோடி பதிலளித்துள்ளார்.

மைக்ரோசாப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் எழுதிய பதிவுக்கு பதிலளித்த பிரதமர்,

"உங்கள் செய்தியை மிகவும் பாராட்டுகிறேன் பில் கேட்ஸ். சில மாதங்களுக்கு முன்பு, நிர்வாகம், சுகாதாரப் பராமரிப்பில் தொழில்நுட்பத்தின் மாற்றத்தக்க பங்களிப்பு, பருவநிலை மாற்றம், நீடித்த வளர்ச்சிக்கான இந்தியாவின் உறுதிப்பாடு ஆகியவை குறித்து நாம் நடத்திய நேர்மறையான, ஈடுபாட்டுடன் கூடிய உரையாடலை நினைவு கூருங்கள். மனித சமுதாயத்தின் நலனுக்காக புதுமைகளை ஊக்குவிப்பதற்கான நமது கூட்டாண்மையை நாங்கள் மதிக்கிறோம்.

ஆப்கானிஸ்தான் முன்னாள் அதிபர் திரு ஹமீத் கர்சாயின் பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

"நண்பர் ஹமீத் கர்சாய் உங்கள் அன்பான வாழ்த்துக்களுக்கு நன்றி"

உகாண்டா அதிபர் திரு யோவேரி கே முசவேணியின் பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

"உங்கள் அன்பான வார்த்தைகளுடன் கூடிய வாழ்த்துக்கு மிகவும் பாராட்டுக்கள் அதிபர் யோவேரி கே முசவேணி!. உகாண்டாவுடனான வலுவான கூட்டாண்மையை முன்னெடுத்துச் செல்வோம். ஜி20 தலைமைப் பொறுப்பில் ஆப்பிரிக்க யூனியன் நிரந்தர உறுப்பினரானதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். அனைத்து துறைகளிலும் நமது வரலாற்று தொடர்பை மேலும் வளர செய்வோம்".

ஸ்லோவேனியா பிரதமர் திரு ராபர்ட் கோலோப் பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

"உங்கள் அன்பான வாழ்த்துக்களைப் பாராட்டுகிறேன், பிரதமர் ராபர்ட் கோலோப். எனது மூன்றாவது பதவிக்காலத்தில் இந்தியாவுக்கும், ஸ்லோவேனியாவுக்கும் இடை-யிலான நெருக்கமான கூட்டாண்மையை நாம் தொடர்ந்து வலுப்படுத்துவோம்.

பின்லாந்து பிரதமர் திரு பெட்டேரி ஓர்போவின் பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

"உங்கள் அன்பான வாழ்த்துக்களுக்கு நன்றி பிரதமர் பெட்டேரி ஆர்போ. இந்தியா-பின்லாந்து உறவுகளை மேம்படுத்தவும், நமது நட்புறவை மேலும் வலுப்படுத்தவும் உங்களுடன் நெருக்கமாக பணியாற்றுவதை நான் எதிர்நோக்கியுள்ளேன்."

கனடா பிரதமர் திரு ஜஸ்டின் ட்ரூடோவின் பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

"வாழ்த்துச் செய்திக்கு நன்றி. பரஸ்பர புரிதல், அனைவரது தேவைகளுக்கும் மதிப்பளித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் கனடாவுடன் இணைந்து பணியாற்றுவதை இந்தியா எதிர்நோக்குகிறது.

செயிண்ட் கிட்ஸ், நெவிஸ் பிரதமர் டாக்டர் டெரன்ஸ் ட்ரூவின் பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

"நன்றி பிரதமர் டெரன்ஸ் ட்ரூ. செயின்ட் கிட்ஸ் & நெவிஸுடன் பல நூற்றாண்டுகள்

பழமையான மக்கள் தொடர்புகள் குறித்து நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். உலகளாவிய தெற்கில் ஒரு முக்கிய கரீபியன் பகுதி கூட்டாளியாக வலுவான ஒத்துழைப்பை உருவாக்க உங்களுடன் பணியாற்றுவதை எதிர்நோக்குகிறோம்.

ஏமன் பிரதமர் திரு அஹ்மத் அவாத் பின் முபாரக்கின் ஒரு பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

“பிரதமர் அஹ்மத் அவாத் பின் முபாரக் உங்கள் அன்பான வாழ்த்துக்களுக்கு மனமார்ந்த நன்றி. ஏமனுடனான வரலாற்று சிறப்புமிக்க நட்புறவை நாங்கள் மதிக்கிறோம். அமைதி, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை, செழிப்பு ஆகியவை உங்கள் நாட்டு மக்களிடையே நிலவ நாங்கள் விரும்புகிறோம்.

டெஸ்லா மோட்டார்ஸ் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு எலான் மஸ்க் வெளியிட்ட பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது;

“உங்கள் வாழ்த்துக்களைப் பாராட்டுகிறேன் எலான் மஸ்க். திறமையான இந்திய இளைஞர்கள், எங்கள் மக்கள்தொகை, கணிக்கக்கூடிய கொள்கைகள், நிலையான ஜனநாயக அரசியல் ஆகியவை நமது கூட்டாளர்கள் அனைவருக்கும் வணிக சூழலை தொடர்ந்து வழங்கும்.

எஸ்வாட்னி பிரதமர் திரு ரஸ்ஸல் மிமிசோ டிலாமினியின் பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

“ரஸ்ஸல் மிமிசோ டிலாமினி, அரச குடும்பம் மற்றும் எஸ்வாட்னி இராஜ்ஜியத்தின் நட்பு மக்களின் அன்பான வாழ்த்துக்களுக்கு நன்றி. நமது கூட்டாண்மையை வலுப்படுத்த நாம் ஒன்றிணைந்து செயல்படுவோம்“ என்றார்.

பெலிஸ் பிரதமர் திரு ஜான் பிரைசினோவின் ஒரு பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

“நன்றி, பிரதமர் ஜான் பிரைசினோ. பெலிஸுடனான நட்பை நாங்கள் மதிக்கிறோம், இந்த நட்புறவை வலுப்படுத்தவும், உலகளாவிய தெற்கின் முன்னேற்றம், செழுமையை நோக்கி பணியாற்ற எதிர்நோக்குகிறோம்.

பெல்ஜியம் பிரதமர் திரு அலெக்சாண்டர் டி குரூவின் பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

“பிரதமர் அலெக்சாண்டர் டி குரூவுக்கு நன்றி. துடிப்பான, வலுவான இந்தியா ஸ்ரீ பெல்ஜியம் இடையேயான கூட்டாண்மை புதிய பதவிக்காலத்தில் தொடர்ந்து புதிய உச்சத்தை அடையும்.

பொலிவியா அதிபர் திரு லூயிஸ் ஆர்ஸின் பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

“உங்கள் பாராட்டுகளுக்கும், இந்திய ஜனநாயகத்திற்கான உங்கள் அன்பான வார்த்தைகளுக்கும், பாராட்டுகள் அதிபர் லூயிஸ் ஆர்ஸ். லத்தீன் அமெரிக்காவில் இந்தியாவுக்கான எங்களுடைய மதிப்புமிக்க கூட்டாண்மையாக பொலிவியா உள்ளது. நமது ஒத்துழைப்பை வலுப்படுத்த நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

அயர்லாந்து பிரதமர் திரு சைமன் ஹாரிஸ் பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

“உங்கள் அன்பான வார்த்தைகளுக்கு நன்றி பிரதமர் சைமன் ஹாரிஸ். இந்தியா-அயர்லாந்து இடையேயான உறவுகள் பகிர்ந்துகொள்ளப்பட்ட ஜனநாயக அம்சங்களின் அடிப்படையில் நிலைநாட்டப்பட்டுள்ளன. இருநாட்டு உறவுகளின் 75-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வேளையில், நமது கூட்டாண்மையை முன்னெடுத்துச் செல்வதற்கான உங்கள் உறுதிப்பாட்டை நான் பகிர்ந்து கொள்கிறேன்.”

ஜாம்பியா அதிபர் திரு ஹகைண்டே ஹிச்சிலேமா பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

“அதிபர் ஹகைண்டே ஹிச்சிலேமாவின் அன்பான வாழ்த்துகளுக்கு நன்றி. இந்தியா-ஜாம்பியா இடையேயான உறவு மேலும் வலிமையுடன் வளரும்“.

இந்தோனேசியாவின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. பிரபோவோ சுபியான்டோ அவர்களின் ஒரு பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

“அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரபோவோ சுபியான்டோவின் வாழ்த்துகளுக்கு நன்றி. நமது விரிவான உத்திசார்ந்த கூட்டாண்மையை வலுப்படுத்தவும், நமது பழமையான உறவுகளை மேம்படுத்தவும் உங்களுடன் நெருக்கமாக பணியாற்ற நான் எதிர்நோக்குகிறேன்.”

சுவிட்சர்லாந்து கூட்டமைப்பின் தலைவர் திருமதி வயோலா ஆம்ஹெர்ட் பதிவுக்கு பிரதமர் பதிலளித்திருப்பதாவது,

“அதிபர் வயோலா ஆம்ஹெர்ட், உங்களின் கனிவான வார்த்தைகளை நாங்கள் பாராட்டுகிறோம். இந்தியாவில் நடைபெறும் ‘ஜனநாயகத் திருவிழா’ உலக அளவில் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்தியா-சுவிட்சர்லாந்து இடையேயான உறவை மேம்படுத்த நாம் இணைந்து செயல்படுவோம்.”

- K. மாரிதுரை

# உலக புகையிலை எதிர்ப்பு தினம் புகையிலையுடன் தொடர்புடைய பாதிப்புகளிலிருந்து தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறையினரைப் பாதுகாக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது: மத்திய சுகாதாரத்துறைச் செயலாளர் திரு அபூர்வ சந்திரா







உலக புகையிலை எதிர்ப்பு தினமான 31.05.2024 அன்று இது தொடர்பான நிகழ்ச்சியை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் புதுதில்லியில் ஏற்பாடு செய்திருந்தது. "புகையிலை-யிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல்" என்ற இந்த ஆண்டின் கருப்பொருள், புகையிலை தாக்கங்களிலிருந்து சிறுவர்கள் மற்றும் இளைஞர்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைக்கிறது.

இது தொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய சுகாதாரத்துறை செயலாளர் திரு அபூர்வ சந்திரா காணொலி மூலம் உரையாற்றினார். புகையிலை பயன்பாட்டை குறைப்பதற்கு தேசிய மற்றும் பிராந்திய அளவில் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

இந்தியாவில், தேசிய புகையிலை கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் - விழிப்புணர்வு பிரச்சாரங்களை தீவிரப்படுத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் புகையிலை பயன்பாட்டை தவிர்ப்பது தொடர்பான புகையிலை கட்டுப்பாட்டுக்கான விளம்பரத் தூதராக பிரபல பேட்மிண்டன் வீராங்கனை பி.வி.சிந்து நியமிக்கப்பட்டுள்ளார். அவர் வெளி-யிட்டுள்ள வீடியோ செய்தியில், புகையிலை பயன்பாட்டிற்கு எதிரான பிரச்சாரத்தில் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சுகாதார அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர் திருமதி வி.ஹெகாலி ஜிமோமி, சுகாதார சேவைகள் துறை தலைமை இயக்குநர் பேராசிரியர் டாக்டர் அதுல் கோயல், இந்தியாவுக்கான உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி டாக்டர் ரோடெரிகோ ஓ∴ப்ரின், ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் உரையாற்றினர். இந்த நிகழ்ச்சியின் போது, புகையிலை எதிர்ப்பு தொடர்பாக உலக சுகாதார அமைப்பின் விருது பெற்றவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மத்திய சுகாதார அமைச்சகத்தின் பொது சேவைகள் இயக்குநரகத்தின் கூடுதல் தலைமை இயக்குநர் டாக்டர் எல்.ஸ்வஸ்திசரண், சுகாதார அமைச்சகத்தின் புகையிலை கட்டுப்பாட்டு பிரிவு துணைச் செயலாளர் டாக்டர் பூனம் மீனா மற்றும் அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.


புகையிலை எதிர்ப்பு தினமான தொடங்கி, இணைய தளம் மூலம் புகையிலை எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பதற்கு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் வகை செய்துள்ளது. இதற்கான உறுதிமொழியை https://pledge.mygov.in/no-tobacco-2024/ என்ற இணையதள இணைப்பின் மூலம் ஏற்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- K. ரமேஷ்குமார்

# இந்திய செல்பேசி எண்களைக் காட்சிப்படுத்தும் சர்வதேச மோசடி அழைப்புகளைத் தடுக்க மத்திய அரசு உத்தரவு

மோசடி செய்பவர்கள், இந்திய குடிமக்களுக்கு இந்திய செல்பேசி எண்களைக் காட்சிப்படுத்தி சர்வதேச அளவில் மோசடி அழைப்புகளை மேற்கொள்வதாகவும், சைபர் கிரைம் மற்றும் நிதி மோசடிகளில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்புகள் இந்தியாவிற்குள் தோன்றியதாகத் தெரிகிறது, ஆனால் அழைப்பு வழி அடையாளத்தை (சி.எல்.ஐ) மாற்றி, வெளிநாட்டைச் சேர்ந்த சைபர் குற்றவாளிகளால் இவை செய்யப்படுகின்றன. போலி டிஜிட்டல் கைதுகள், ஃபெடெக்ஸ் மோசடிகள், கூரியரில் போதைப்பொருள், அரசு மற்றும் காவல்துறை அதிகாரிகளாக ஆள்மாறாட்டம், டி.ஓ.டி / டிராய் அதிகாரிகளால் செல்பேசி எண்கள் துண்டிக்கப்படுதல் போன்ற சமீபத்திய வழக்குகளில் இதுபோன்ற சர்வதேச ஏமாற்று அழைப்புகள் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

எனவே, தொலைத் தொடர்புத் துறை (டி.ஓ.டி) மற்றும் தொலைத் தொடர்பு சேவை வழங்குநர்கள் (டி.எஸ்.பி) எந்தவொரு இந்திய தொலைத் தொடர்பு சந்தாதாரரும் இத்தகைய சர்வதேச ஏமாற்று அழைப்புகளை அடையாளம் கண்டு தடுக்க ஒரு முறையை வகுத்துள்ளன. தற்போது இதுபோன்ற சர்வதேச ஏமாற்று அழைப்புகளை தடுக்க டி.எஸ்.பி.க்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.




இந்திய லேண்ட்லைன் எண்களுடன் உள்வரும் சர்வதேச மோசடி அழைப்புகள் ஏற்கனவே டி.ஓ.டி வழங்கிய வழிகாட்டுதல்களின்படி டி.எஸ்.பி.க்களால் தடுக்கப்பட்டுள்ளன.

பயனர்களின் பாதுகாப்பு, டிஜிட்டல் இந்தியா தொலைநோக்குப் பார்வையின் ஒருங்கிணைந்த பகுதியாக இருப்பதால், தொலைத் தொடர்பு பயனர்களைப் பாதுகாக்க குடிமக்களை மையமாகக் கொண்ட சஞ்சார் சாத்தி தளம் (https://sancharsaathi.gov.in/) உட்பட பல முயற்சிகளை தொலைத் தொடர்புத் துறை ஏற்கனவே மேற்கொண்டுள்ளது.

சிறந்த முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும், வேறு வழிகளை மோசடிக்காரர்கள் கையாளலாம். இதுபோன்ற அழைப்புகளுக்கு, சஞ்சார் சாத்தியில் உள்ள சக்ஷூ பிரிவில் சந்தேகத்திற்குரிய மோசடி தகவல்தொடர்புகளைப் புகாரளிக்கலாம்.

**- பி.ஸ்டாலின்**

# தில்லி வெப்பநிலை தரவுகளை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது

இந்திய வானிலை ஆய்வுத் துறை (ஐஎம்டி), கோடை பருவத்திலிருந்து நிறுவப்பட்ட தானியங்கி வானிலை நிலையங்கள் நெட்வொர்க்கின் அடிப்படையில் தில்லியில் வெப்பநிலை தரவை வெளியிட்டது. தில்லி மற்றும் என்.சி.ஆரின் பல்வேறு பகுதிகளில் பரவியுள்ள 15 புதிய இடங்களுக்கான வெப்பநிலை மற்றும் மழை அவதானிப்புகளின் செயல்பாட்டு அறிக்கையும் வெளியிடப்பட்டது.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் கூற்றுப்படி, இன்று 5 துறை ஆய்வகங்கள் (சஃப்தர்ஜங், பாலம், ஆயாநகர், ரிட்ஜ் மற்றும் லோடி சாலை) மற்றும் 15 நிலையங்களால் பதிவு செய்யப்பட்ட அதிகபட்ச வெப்பநிலை அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.


தில்லி என்.சி.ஆரில் அதிகபட்ச வெப்பநிலை நகரின் பல்வேறு பகுதிகளில் 45.2 டிகிரி செல்சியஸ் முதல் 49.1 டிகிரி செல்சியஸ் வரை வேறுபடுகிறது, மற்ற நிலையங்களுடன் ஒப்பிடும்போது முங்கேஷ்பூரில் 52.9 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது.


இன்றைய அதிகபட்ச வெப்பநிலை, நேற்றுடன் ஒப்பிடும்போது தில்லியில் பல இடங்களில் குறைந்துள்ளது. தில்லியில் பிற்பகலில் பல இடங்களில் மழை பெய்ததால் வெப்பநிலை மேலும் குறைந்தது.

நீர்நிலைகளுக்கு அருகில் இருப்பது, தரிசு நிலம், கான்கிரீட் மற்றும் அடர்த்தியான நகர்ப்புற தொகுப்புகள், பசுமையான பகுதிகள் போன்ற உள்ளூர் வெளிப்பாடு காரணமாக நகர்ப்புறங்களில் வெப்பநிலை இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.

**- A. தங்கராஜ்**

# நாட்டில் தற்போது நிலவி வரும் வெப்ப அலை நிலைமை மற்றும் பருவமழை தொடங்குவதற்கான தயார்நிலை குறித்து பிரதமர் ஆய்வு செய்தார்






நாட்டில் நிலவும் வெப்ப அலை நிலைமை மற்றும் பருவமழை தொடங்குவதற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்கான கூட்டத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமை தாங்கினார்.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் கணிப்பின்படி, ராஜஸ்தான், குஜராத் மற்றும் மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகளில் வெப்ப அலை தொடர வாய்ப்புள்ளது என்று பிரதமரிடம் விளக்கப்பட்டது. இந்த ஆண்டு, பருவமழை நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இயல்பானதாகவும், இயல்பை விடவும் அதிகமாகவும் , தீபகற்ப இந்தியாவின் சில பகுதிகளில் இயல்பை விடவும் குறைவாகவும் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

தீ விபத்து சம்பவங்களை தடுப்பதற்கும், கையாள்வதற்கும் முறையான பயிற்சிகள் வழக்கமான அடிப்படையில் செய்யப்பட வேண்டும் என்று பிரதமர் அறிவுறுத்தியுள்ளார். மருத்துவமனைகள் மற்றும் பிற பொது இடங்களில் தீ தடுப்பு மற்றும் மின் பாதுகாப்பு ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். காடுகளில் தீயணைப்பு நடவடிக்கைகளைப் பராமரிப்பதற்கும், உயிரி எரிபொருளை உற்பத்தி செய்வதற்கும் வழக்கமான பயிற்சிகள் திட்டமிடப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

காட்டுத் தீயை உரிய நேரத்தில் கண்டறிவதிலும், அதனை நிர்வகிப்பதிலும் “வேன் அக்னி” இணையதளத்தின் பயன்பாடு குறித்து பிரதமரிடம் தெரிவிக்கப்பட்டது.

பிரதமரின் முதன்மைச் செயலாளர், அமைச்சரவைச் செயலாளர், உள்துறை செயலாளர், புவி அறிவியல் அமைச்சகத்தின் செயலாளர், தேசிய பேரிடர் மீட்புப் படையின் தலைமை இயக்குநர், தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் உறுப்பினர் செயலர், பிரதமர் அலுவலகம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சகங்களின் மூத்த அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

- V. கண்ணபிரான்

# கார்கில் வெற்றியின் 25 ஆண்டுகளை நினைவுகூர இந்திய ராணுவத்தின் மோட்டார் சைக்கிள் பயணம் தொடங்கியது




1999-ம் ஆண்டு கார்கில் போரின் போது இந்தியா பாகிஸ்தானை வெற்றிகொண்டதன் 25-வது ஆண்டினை நினைவுகூரும் வகையிலும், கார்கில் வீரர்களின் துணிவு மற்றும் தியாகத்தைப் போற்றும் வகையிலும், இந்தியா முழுவதற்குமான மோட்டார் சைக்கிள் பயணம் இன்று தொடங்கியது.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பயணத்தில் ஒவ்வொன்றிலும் 8 மோட்டார் சைக்கிள்களுடன் மூன்று அணியினர் கிழக்கே தின்ஜான், மேற்கே துவாரகா, தெற்கே தனுஷ்கோடி என நாட்டின் மூன்று முனைகளிலிருந்து புறப்பட்டனர். இதில் ஈடுபட்டுள்ளவர்கள் பயணம் செய்யும் வழியில் வசிக்கின்ற கார்கில் வீரர்கள், வீர நங்கைகள், மூத்த ராணுவ வீரர்கள் ஆகியோரை சந்திக்க உள்ளனர். இந்திய ராணுவத்தில் இளைஞர்கள் சேர்வதை ஊக்கப்படுத்தவும், விழிப்புணர்வை ஏற்படுத்தவும் செல்லும் வழியில் உள்ள போர் நினைவுச் சின்னங்களிலும் இவர்கள் அஞ்சலி செலுத்துவார்கள்.

தின்ஜானிலிருந்து புறப்பட்ட அணியினர் குவஹாத்தி, கோரக்பூர், லக்னோ, ஆக்ரா வழியாக சுமார் 2489 கிலோ மீட்டர் பயணம் செய்து தில்லியை அடைவார்கள்.

துவாரகாவில் இருந்து புறப்பட்ட அணியினர் அகமதாபாத், உதய்பூர், ஜெய்பூர், ஆல்வார் வழியாக சுமார் 1565 கிலோ மீட்டர் பயணம் செய்து தில்லியை அடைவார்கள்.

தனுஷ்கோடியிலிருந்து மதுரை, கோயம்புத்தூர். பெங்களூரு, ஹைதராபாத், போபால், குவாலியர் வழியாக சுமார் 2963 கிலோ மீட்டர் பயணம் செய்து தில்லியை அடைவார்கள்.

ஜூன் 26 அன்று இந்த அணியினர் தில்லிக்கு சென்ற பின் இரண்டு அணிகளாகி ஒரு அணியினர் அம்பாலா, அமிர்தசரஸ், ஜம்மு, உதம்பூர், ஸ்ரீநகர் வழியாக சுமார் 1085 கிலோ மீட்டர் பயணம் செய்து கார்கில் போரின் முக்கியப் பகுதியான திராசில் உள்ள கூன்குன்றுக்கு செல்வார்கள்.

மற்றொரு அணியினர் மணாலி, டாங்ஸ்டே, லே வழியாக சுமார் 1509 கிலோ மீட்டர் பயணம் செய்து திராஸ் பகுதியை சென்றடைவார்கள்.

- சிவசங்கர்

# டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ் சமர்ப்பிப்புக்காக இபிஎஸ் ஓய்வூதியதாரர்கள் முக சரிபார்ப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்




தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பில் (இபிஎப்ஓ) 78 லட்சத்துக்கும் மேற்பட்ட ஓய்வூதியதாரர்கள் உள்ளனர். அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தைத் தொடர ஒவ்வொரு ஆண்டும் ஆயுள் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். முன்னதாக அவர்கள் ஆயுள் சான்றிதழை சமர்ப்பிக்க வங்கிகளுக்கு செல்ல வேண்டியிருந்தது. அதன் சவால்கள் காரணமாக சில குறைகள் ஏற்பட்டன.

'வாழ்க்கையை எளிதாக்குவதை' மேம்படுத்த, இபிஎப்ஓ 2015-ல் அதன் ஓய்வூதியதாரர்களுக்கு டிஜிட்டல் ஆயுள் சான்றிதழை அறிமுகம் செய்தது. ஓய்வூதியதாரர்களிடமிருந்து பயோமெட்ரிக் அங்கீகாரத்தின் அடிப்படையில் டிஜிட்டல் ஆயுள் சான்றிதழ்களை ஏற்றுக்கொள்கிறது. பயோமெட்ரிக் அடிப்படையிலான டி.எல்.சியை சமர்ப்பிப்பதற்கு ஓய்வூதியதாரர் எந்தவொரு வங்கி, தபால் அலுவலகம், பொது சேவை மையம் அல்லது ஈ.பி.எஃப்.ஓ அலுவலகத்தின் கிளைக்கு நேரடியாக செல்ல வேண்டும். ஏனெனில் அங்கு கைரேகை / கருவிழி பதிவு சாதனங்கள் இருக்கின்றன.

ஒரு வங்கி / தபால் அலுவலகத்திற்கு நேரடியாகச் செல்ல வேண்டியிருப்பதால் வயதானவர்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் குறைக்க, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மற்றும் இந்திய தனித்துவ அடையாள ஆணையம் ஆகியவை முக அங்கீகார தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளன. இதன் மூலம் முகத்தை அடையாளம் காணும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆயுள் சான்றிதழைப் பெறலாம். இபிஎப்ஓ இந்த தொழில்நுட்பத்தை 2022 ஜூலையில் ஏற்றுக்கொண்டது. இது ஓய்வூதியதாரர்கள் தங்கள் வீடுகளிலிருந்து டி.எல்.சி.க்களை சமர்ப்பிப்பதற்கான முற்றிலும் புதிய முறையை அறிமுகப்படுத்தியது, இது ஓய்வூதியதாரர்களுக்கு இந்த செயல்முறையை மிகவும் அணுகக்கூடியதாகவும் மலிவானதாகவும் ஆக்குகிறது. வயதான காலத்தில் வங்கிகள், தபால் நிலையங்கள் போன்றவற்றிற்கு பயணிக்கும் தொந்தரவுகளை தவிர்க்க இந்த செயல்முறையை முடிக்க அவர்கள் எந்த ஆண்ட்ராய்டு அடிப்படையிலான ஸ்மார்ட்போனையும் பயன்படுத்தலாம்.

இந்த முறை ஓய்வூதியதாரர்களை அவர்களின் வீடுகளில் இருந்து ஸ்மார்ட்போன் கேமராவைப் பயன்படுத்தி முகத்தை ஸ்கேன் மூலம் அடையாளம் காண அனுமதிக்கிறது. முக அங்கீகார பயன்பாட்டைப் பயன்படுத்தி, ஆதார் தரவுத்தளத்திற்கு எதிராக இந்த சரிபார்ப்பு மேற்கொள்ளப்படுகிறது.

தொடங்கப்பட்டதிலிருந்து, முக அங்கீகார தொழில்நுட்ப அடிப்படையிலான டிஎல்சிக்கள் 2022-23 ஆம் ஆண்டில் 2.1 லட்சம் ஓய்வூதியதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன, இது 2023-24 ஆம் ஆண்டில் 6.6 லட்சமாக உயர்ந்துள்ளது, இது இந்த தொழில்நுட்பத்தின் பயன்பாட்டில் ஆண்டுக்கு 200% வளர்ச்சியை பிரதிபலிக்கிறது. 2023-24 ஆம் ஆண்டில் 6.6

லட்சம் முக அடையாள அடிப்படையிலான டிஎல்சிக்கள் ஆண்டில் பெறப்பட்ட மொத்த டிஎல்சிக்களில் கிட்டத்தட்ட 10% ஆகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. கடந்த நிதியாண்டில் ஒட்டுமொத்தமாக சுமார் 60 லட்சம் டி.எல்.சி.க்கள் ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

முகஅங்கீகாரமுறையைப்பயன்படுத்துவதற்கு தங்கள் ஸ்மார்ட்போன்களில் "ஆதார் ஃபேஸ் ஆர்டி" மற்றும் "ஜீவன் பிரமான்" ஆகிய இரண்டு ஆப்களை நிறுவ வேண்டும். இந்த பயன்பாடுகளுக்கான ஆபரேட்டர் சரிபார்ப்பு ஆதார் இணைக்கப்பட்ட மொபைல் எண்கள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. வெற்றிகரமாக ஃபேஸ் ஸ்கேன் செய்வதை உறுதி செய்ய விரிவான வழிகாட்டுதல்கள் செயலிகளில் வழங்கப்பட்டுள்ளன. ஸ்கேன் முடிந்ததும், ஜீவன் பிரமான் ஐடி மற்றும் பிபிஓ எண்ணுடன் மொபைல் திரையில் டி.எல்.சி சமர்ப்பிப்பு உறுதிப்படுத்தப்பட்டு, வீட்டிலிருந்து எளிதாக செயல்முறையை முடிக்கிறது.

ஓய்வூதியதாரர்களின் டிஎல்சி நோக்கத்திற்காக இந்த புதுமையான மற்றும் வசதியான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது 2022 ஜூலையில் இபிஎஃப்ஓ-வின் மென்பொருளில் உட்பொதிக்கப்பட்டது. இந்த புதிய முறையை அதிக அளவில் ஓய்வூதியம் பெறுவோரிடையே பிரபலப்படுத்துவதை உறுதி செய்யும் பொருட்டு அனைத்து கள அலுவலகங்களுக்கும் விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. கள அலுவலகங்களில் மட்டுமின்றி, 2023 ஜனவரி முதல் இந்தியா முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும்நடைபெறும்நிதிஆப்கேநிகாத் நிகழ்ச்சியின் போதும் ஓய்வூதியதாரர்களுக்கு இந்த செயல்முறை தொடர்ந்து விளக்கப்படுகிறது. இந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது குறித்த விரிவான வீடியோ EPFO @SOCIALEPFO இன் அதிகாரப்பூர்வ YouTube –தளத்தில் கிடைக்கிறது.

இந்த முறையின் வசதி மேலும் ஓய்வூதியதாரர்களின் வாழ்க்கையை எளிதாக்கும் என்று EPFO நம்புகிறது.

- R. ஹரிகிருஷ்ணன்

# நாடு முழுவதும் 4 வங்கிகளின் 1,128 கிளைகளில் ஓய்வூதியதாரர்களுக்கான சேவை மையங்களை அமைக்க பாதுகாப்புத் துறையின் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

நாடு முழுவதும் உள்ள பாங்க் ஆஃப் இந்தியா, கனரா வங்கி, சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா, உத்கர்ஷ் சிறு நிதி வங்கி ஆகியவற்றின், 1,128 கிளைகளில் பாதுகாப்புத் துறையின் ஓய்வூதியதாரர்களுக்கான (ஸ்பார்ஷ்) சேவை மையங்களை அமைக்க பாதுகாப்பு அமைச்சகத்தின் பாதுகாப்புக் கணக்குத்துறை புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. இந்த ஒப்பந்தங்கள் கடைக்கோடியில் உள்ள ஓய்வூதியதாரர்களுக்கு குறிப்பாக ஸ்பார்ஷ் இணைப்பைப் பெறுவதற்கு தொழில்நுட்ப வசதி இல்லாத தொலைதூர பகுதியில் உள்ளவர்களுக்கு தொடர்பு வழங்குவதை உறுதி செய்யும்.

இத்தகைய ஓய்வூதியதாரர்களின் குறைகளைப் பதிவு செய்வது, டிஜிட்டல் அடிப்படையில் வருடாந்தர அடையாளப் பதிவு, தரவு சரிபார்த்தல் ஆகியவற்றுக்கு இந்த சேவை மையங்கள் பயனுடையதாக இருக்கும். இந்த மையங்களை அணுகுவதற்கு கட்டணம் எதுவும் செலுத்த வேணடியதில்லை. இங்கு குறைந்த சேவைக் கட்டணம் பாதுகாப்புக் கணக்குத் துறையால் மையங்களுக்கு வழங்கப்படும்.

இந்த ஒப்பந்தங்களையடுத்து தற்போது நாடு முழுவதும் 15 வங்கிகளின் 26,000–க்கும் அதிகமான கிளைகளில் ஸ்பார்ஷ் சேவைகள் கிடைக்கும். பாதுகாப்புக் கணக்குத் தொகையால், தனியாக செயல்படுத்தப்படும் 199 சேவை மையங்கள் நாடு முழுவதும் உள்ள 3.75 லட்சம் பொது சேவை மையங்கள் ஆகியவற்றுடன் கூடுதலாக இந்தப் புதிய சேவை மையங்கள் செயல்படும். திறமையாகவும், பொறுப்போடும், வெளிப்படைத் தன்மையோடும் பாதுகாப்புத் துறையினரின் ஓய்வூதியங்களை நிர்வகிப்பதில் இது ஓர் அடிப்படையான மாற்றமாகும்.

- கா.கலைமணி

# அடல் புத்தாக்க இயக்கம் மற்றும் லா பவுண்டேஷன் டசால்ட் சிஸ்டம்ஸ் இந்தியா ஏற்பாடு செய்த மாணவர் தொழில்முனைவோர் திட்டம்




அடல் புத்தாக்க இயக்கம், லா பவுண்டேஷன் டசால்ட் சிஸ்டம்ஸ் இந்தியா உடன் இணைந்து மாணவர் தொழில்முனைவோர் திட்டத்தின் 2023-24 பருவத்தின் கீழ் பள்ளி மாணவர்களுக்கான அதன் முதன்மைத் திட்டமான 'மேட் இன் 3டி தொழில்முனைவோருக்கான அடித்தளம்' என்பதைக் கொண்டாடியது. இந்த நிகழ்வு இளம் மனங்களிடையே புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவை வளர்ப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட எட்டு மாதப் பயணத்தின் முடிவாகும்.

இந்தத் திட்டத்தின் 2023-24 பருவம் மாணவர்களை வேளாண் அறிவியல் மையங்களுடன் இணைப்பதில் சிறப்பு கவனம் செலுத்தியது. இதன் விளைவாக கிராமப்புற சுற்றுச்சூழல் கருப்பொருளை மையமாகக் கொண்ட குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான திட்டங்கள் உருவாகின. இந்தியா முழுவதும் உள்ள 140 பள்ளிகளிலிருந்து, முதல் 12 அணிகள் தயாரிப்பு வடிவமைப்பில் குறிப்பிடத்தக்க புதுமைகளை வெளிப்படுத்தின.

அடல் புத்தாக்க இயக்கத்தின் திட்ட இயக்குநர் டாக்டர் சிந்தன் வைஷ்ணவ், டசால்ட் சிஸ்டம்ஸ் இந்தியா நிர்வாக இயக்குநர் தீபக் என்ஜி, டசால்ட் சிஸ்டம்ஸ் சொல்யூஷன்ஸ் ஆய்வகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி சுதர்சன் மொகசலே, புனேயில் உள்ள அக்ஷரா இன்டர்நேஷனல் பள்ளியின் தொழில்நுட்ப ஆலோசகர் ஜெயேஷ் ரத்தோர் உள்ளிட்ட பிரமுகர்கள் இந்த விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்டனர். டாக்டர் சிந்தன் வைஷ்ணவ் இந்திய கல்வி நிலப்பரப்பில் புதுமையின் முக்கியத்துவத்தையும், எதிர்கால கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில்முனைவோரை வளர்ப்பதில் திட்டத்தின் பொருத்தத்தையும் எடுத்துக்காட்டி எழுச்சியூட்டும் உரையை வழங்கினார்.

மகாராஷ்டிராவைச் சேர்ந்த சிகாலி கிராமப் பள்ளியான ஸ்ரீ தாதா மஹராஜ் நடேகர் வித்யாலயைச் சேர்ந்த மாணவர்கள் முதல் இடத்தைப் பிடித்தனர். புனேயில் உள்ள ஆர்க்கிட் பள்ளி இரண்டாவது இடத்தையும், தில்லியின் தவுலா குவானில் உள்ள ஸ்பி-ரிங்டேல்ஸ் பள்ளி மூன்றாவது இடத்தையும் பிடித்தன. இந்த வெற்றிகள் இந்தியாவின் அடுத்த தலைமுறை கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில்முனைவோரை வளர்ப்பதில் திட்டத்தின் மாற்றத்தக்க தாக்கத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

- ம.திலீப் குமார்,

# ராணுவ வீரர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு சிகிச்சையளிக்க தோல் வங்கி வசதியை ராணுவ மருத்துவமனை அறிமுகம் செய்கிறது




ஆயுதப்படை மருத்துவ சேவைகளுக்குள் முதல் அதிநவீன தோல் வங்கி வசதியை 2024, ஜூன் 18 அன்று திறப்பதாக ராணுவ மருத்துவமனை அறிவித்துள்ளது. இந்தக் குறிப்பிடத்தக்க முயற்சி, ராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு ஏற்படும் மோசமான தீக்காயங்கள் மற்றும் பிற தோல் சம்பந்தமான பிரச்சனைகளுக்கு சிகிச்சையளிப்பதில் புரட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

புதிய தோல் வங்கி, தோல் ஒட்டுக்களின் சேகரிப்பு, செயலாக்கம், சேமிப்பு மற்றும் விநியோகத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட மையமாக செயல்படும். இது நாடு முழுவதும் உள்ள ராணுவ மருத்துவ மையங்களுக்கு ஒரு முக்கியமான ஆதாரத்தை வழங்கும். இந்த வசதியை நிறுவுவதன் மூலம், ராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு மிகவும் மேம்பட்ட தோல் மாற்று சிகிச்சைகள் கிடைப்பதை ஆயுதப்படைகள் உறுதி செய்கின்றன.

தோல் வங்கியில் பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர்கள், திசு பொறியாளர்கள் மற்றும் சிறப்பு தொழில்நுட்ப வல்லுநர்கள் உட்பட அதிக பயிற்சி பெற்ற மருத்துவ நிபுணர்களின் குழு பணியாற்றும். இந்த வசதி, தரக் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பின் மிக உயர்ந்த தரத்தை கடைப்பிடிக்கும், தோல் ஒட்டுக்களின் ஒருங்கிணைப்பு மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்யும்.

இந்தத் தோல் வங்கியைத் தொடங்குவது ராணுவ வீரர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான உறுதியான அர்ப்பணிப்புக்கு ஒரு சான்று என்று டி.ஜி.எம்.எஸ் (ராணுவம்) லெப்டினன்ட் ஜெனரல் அரிந்தம் சாட்டர்ஜி கூறினார். இந்த வசதி சிகிச்சையின் தரத்தை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், கடுமையான காயங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளிக்கும் திறனையும் வலுப்படுத்தும் என்று அவர் கூறினார்.

- துரை. சந்துரு,

# திமுகவின் தரமான அரசியல் ‘40/40’

## நன்றி தெரிவித்தார் முதல்வர் ஸ்டாலின்



நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை நாடு முழுவதும் பரபரப்பாக நடந்து வரும் சூழலில், முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் இன்று மாலை 7 மணியளவில் செய்தியாளர்கள் சந்திப்பை நடத்தினார்.

அவர் பேசும்போது, தேர்தலில் வாக்களித்த வாக்காளர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன். பாசிச கொள்கையை வீழ்த்தி, இந்தியாவை காப்போம் என்று செயல்பட்ட இந்தியா கூட்டணி தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்.

கடந்த முறை 39 தொகுதிகளில் வெற்றி பெற்ற நிலையில், இந்த முறை 40 தொகுதிகளில் வெற்றி பெற்றிருக்கிறோம். தி.மு.க. கூட்டணி 40-க்கு 40 என்ற அளவில் அமோக வெற்றியை பெற்றுள்ளது.

ஆட்சியை பிடிக்க முடியும் அளவுக்கு பெரும்பான்மையை பெற முடியாமல் பா.ஜ.க. தள்ளப்பட்டு உள்ளது. பா.ஜ.க.வின் பணபலம் இந்த தேர்தலில் எடுபடவில்லை. அதனை உடைத்து எறிந்துள்ளோம்.

இந்திய ஜனநாயகம் மற்றும் அரசியல் சாசனம் ஆகியவற்றை பாதுகாக்க தி.மு.க. தொடர்ந்து பணியாற்றும். தமிழகம், புதுச்சேரியில் தி.மு.க. கூட்டணி அனைத்து இடங்களிலும் முன்னிலை பெற்றுள்ளது.

இந்த தேர்தலில் பா.ஜ.க.வின் கனவு பலிக்கவில்லை. தமிழகத்தில் தாமரை மலரும், மலரும் என கூறினார்கள். ஆனால், மலராமலேயே போய் விட்டது என்று பேசியுள்ளார்.

இந்த செய்தியாளர்கள் சந்திப்பில், பிரதமர் பற்றிய கேள்விக்கு அவர், என்னுடைய உயரம் எனக்கு தெரியும் என்று பதிலளித்து உள்ளார்.

தமிழக மக்கள் 40-க்கு 40 என வெற்றியை வழங்கி உள்ளனர். ஒடிசாவில் தமிழர்களை மோடி இழிவாக பேசியுள்ளார். தமிழகத்தில் உள்ள மோடி எதிர்ப்பு முழுமையாக வெளிப்பட்டு உள்ளது. நாடாளுமன்ற தேர்தல் வெற்றியை தலைவர் கலைஞருக்கு காணிக்கை ஆக்குகிறேன் என்றும் பேசியுள்ளார்.

தொடர்ந்து அவர், மோடி எதிர்ப்பலை பல மாநிலங்களில் உள்ளது என்றும் கூறியுள்ளார். டெல்லியில் நாளை நடைபெற உள்ள இந்தியா கூட்டணியின் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்கிறேன் என்றும் அவர் பேசியுள்ளார்.

- தமிழ்மணி

# மத்திய தகவல், ஒலிபரப்புத் துறை அமைச்சராக அஸ்வினி வைஷ்ணவ் பொறுப்பேற்றார்

மத்திய தகவல், ஒலிபரப்புத் துறை அமைச்சராக திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று பொறுப்பேற்றுக் கொண்டார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு வைஷ்ணவ், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமை-யிலான அரசு ஏழைகளின் மேம்பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் உள்ளது என்றார். 3 கோடி கிராமப்புற, நகர்ப்புற வீடுகள் கட்டுவதற்கான நேற்றைய அமைச்சரவை முடிவை மீண்டும் சுட்டிக்காட்டிய அமைச்சர், அரசின் முதல் நாளில் அமைச்சரவை எடுத்த முதல் முடிவு ஏழைகளுக்கு அதிகாரமளிக்க அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்றார். நாட்டு மக்களுக்கு அரசு தொடர்ந்து சேவை செய்யும் என்று அவர் மேலும் கூறினார்.

தகவல், ஒலிபரப்புத் துறை அமைச்சராகப் பணியாற்றுவதற்கான வாய்ப்பை



வழங்கியதற்காகப் பிரதமருக்கு அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

திரு வைஷ்ணவை அமைச்சக செயலாளர் திரு சஞ்சய் ஜாஜூ, ஊடகப் பிரிவுகளின் உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

- பா.சரவணன்

# மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சராக டாக்டர் லோகநாதன் முருகன் பொறுப்பேற்றார்

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சராக டாக்டர் லோகநாதன் முருகன் இன்று பொறுப்பேற்றார். இந்நிகழ்ச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய டாக்டர் முருகன், தம்மீது நம்பிக்கை வைத்துள்ள பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவிப்பதாகக் கூறினார். நாட்டு மக்களுக்கும், அரசுக்கும் இடையே தகவல் தொடர்பை ஏற்படுத்தி அரசின் கொள்கைகளை வெளியிடுவதில் தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் முக்கியப் பங்காற்றுவதாக அவர் மேலும் கூறினார்.


ஏழைகள் நலனில் அரசு உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்த டாக்டர் முருகன், பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 3 கோடி ஊரக மற்றும் நகர்ப்புற வீடுகளைக் கட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை முடிவு இதற்கு உதாரணம் என்று குறிப்பிட்டார்.



அமைச்சக செயலாளர் திரு சஞ்சய் ஜாஜூ, அமைச்சகம் மற்றும் ஊடகப் பிரிவுகளைச் சேர்ந்த இதர உயர் அதிகாரிகள் டாக்டர் முருகனை வரவேற்றனர்.

- தீ.பாமா

# 3 மணி நேரத்தில் மருத்துவ காப்பீடு கோரிக்கைகளுக்கு தீர்வு



மருத்துவ காப்பீடு செய்தவர்களுக்கு வழங்கும் சேவைகளை மேம்படுத்துவதற்காக இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம்(ஐஆர்டிஏஐ) பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இது தொடர்பாக ஐஆர்டிஏஐ உத்தரவில் கூறப்பட்டு உள்ளதாவது:

அந்த வகையில், மருத்துவ காப்பீட்டின் கீழ் சிகிச்சை எடுக்கும் நபருக்கான கிளைம் தொகைக்கு, அவர் டிஸ்சார்ஜ் செய்யப்படும் 3 மணி நேரத்திற்கு முன் ஒப்புதல் வழங்க வேண்டும்.

இதில் தாமதம் ஏற்பட்டால், கூடுதலாக ஆகும் செலவை சம்பந்தப்பட்ட நிறுவனம், தனது சொந்த நிதியில் இருந்து வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளது. மருத்துவ காப்பீடுகளை ஆண்டுதோறும் புதுப்பிப்பதற்கும், அதில் உள்ள பலன்களை தக்க வைத்து கொள்வதற்கும் ஒரு மாத காலம் கூடுதல் அவகாசம் வழங்க வேண்டும்.

மருத்துவ காப்பீட்டின் கீழ் சிகிச்சை பெறும் பாலிசிதாரர், இறக்க நேரிட்டால், காப்பீடு நிறுவனம் விரைவாக கிளைம் தொகையை வழங்க வேண்டும். அவரது குடும்பத்திற்கு சிக்கல் ஏற்படாத வகையில் காப்பீடு தொகையை உடனடியாக வழங்குவதுடன், அவரின் உடலை சிக்கலின்றி பெற்று அதனை கொண்டு செல்வதற்கான செலவையும் காப்பீடு நிறுவனமே ஏற்க வேண்டும்.

கிளைம் மறு ஆய்வுக் குழுவின் ஒப்புதல் இல்லாமல் எந்தவொரு கோரிக்கையையும் நிராகரிக்க கூடாது.

100 % பணமில்லா கோரிக்கைகளுக்கான நடவடிக்கைகளை காப்பீடு நிறுவனங்கள் ஒரு மணி நேரத்தில் செய்து முடிக்க வேண்டும். இதற்காக தனி உதவி மையங்களை மருத்துவமனைகளில் ஏற்படுத்த வேண்டும்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்கள் அனைத்து ஜூலை 31 ம் தேதிக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

- B. **நவீன்குமார்**


RGS கோ
ஸ்வஸ்தி
மஹா பெரியவர்
ஆசியோடு
அன்பர்களே!!
“ கோமாதாவிற்கு உங்கள் கைகளால் தீவனம் தருவது, உங்கள் பாவங்களைப் போக்கி உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் நிறைந்த நன்மைகளையும், புண்ணியத்தையும் தரும். கோமாதாவின் பராமரிப்பில் உங்கள் பங்கும் இருக்கட்டுமே ”
ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹாஸ்வாமிகள்
கோ சேவைக்கென்றே தனித்துவமாய் தயாரிக்கப்பட்டது. இது பெல்லட் (குச்சி) வடிவில் இருக்கும். 2கிலோ மற்றும் 25 கிலோ அளவுகளில் பிரத்யேகமாய்க் கிடைக்கிறது. என்றும் இறை பணியில்.
மக்காச்சோளம்
தவிடு
தேங்காய் புண்ணாக்கு
சிறுதானிய தவிடு
அகத்தி
அஸ்வகந்தா
சதாவரி
ஜிவந்தி
முருங்கை இலை
ஆகிய மூலிகைகளின் கலப்பாகத் தயாரிக்கப்படுகிறது.
45 வருட நம்பிக்கையுடன், இறை பக்தியோடு வழங்குவது, உங்கள்
RGS FEEDS
SINCE 1979
காமதேனு
மாட்டுத்தீவனங்கள்
சூப்பர்
TM
டெலிவரி மற்றும் ஆர்டர்களுக்கு, அழைத்திடுங்கள்,
7200026166 | 9789774166
உற்பத்தியாளர்கள்: RGS மாட்டுத்தீவனங்கள்
82 பெருந்துறை சாலை, ஈரோடு | WWW.RGSFEEDS.COM

போக்குவரத்து விதிமீறலில் ஈடுபடும்

# அனைத்து வாகனங்களையும் பறிமுதல் செய்ய வேண்டும்

## தமிழ்நாடு அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஜூன் 07-

நம்பர் பிளேட்களில் ஸ்டிக்கர்கள் ஒட்டி போக்குவரத்து விதிமீறலில் ஈடுபடும் அனைத்து வாகனங்களையும் பறிமுதல் செய்ய தமிழக அரசுக்கு சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

சென்னை நகரில் தனியார் வாகனங்களில் காவல் துறை, அரசு, ஊடகம், வழக்கறிஞர் என ஸ்டிக்கர் ஒட்டக் கூடாது எனவும், மீறினால் அபராதம் விதிக்கப்படும் எனவும் சென்னை போக்குவரத்து காவல் துறை உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவை தமிழகம் முழுவதும் அமல்படுத்த உத்தரவிடக் கோரி சென்னையைச் சேர்ந்த தேவதாஸ் காந்தி வில்சன் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அந்த மனுவில், கார் கண்ணாடிகளில் கருப்பு ஸ்டிக்கர் ஒட்டக் கூடாது என்ற சுப்ரீம் கோர்ட் உத்தரவு முறையாக அமல்படுத்தப்படவில்லை எனவும், வாகனங்களின் முன் பக்கம், பின்பக்க கண்ணாடிகளில் மத சின்னங்கள், அரசியல் கட்சி தலைவர்கள் படங்கள், நடிகர்கள் படங்களை ஒட்டத் தடை விதிக்க வேண்டும் எனவும், பேருந்துகளின் பின்புறமும், பக்கவாட்டு பகுதிகளிலும் விளம்பரங்கள் செய்வதை தடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த பொறுப்பு தலைமை நீதிபதி மகாதேவன் மற்றும் நீதிபதி முகமது சபிக் அமர்வு, போக்குவரத்து விதிகளை மீறும் அரசியல்வாதிகளின் வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களையும் உடனடியாக பறிமுதல் செய்ய வேண்டும் என மாநில அரசுக்கு உத்தரவிட்டது. மேலும், ஸ்டிக்கர்கள் ஒட்ட தடை விதித்தும், கண்ணாடிகளில் கருப்பு கண்ணாடி ஒட்டியுள்ள வாகனங்களை சோதனை செய்ய வேண்டும் என அறிவுறுத்திய நீதிபதிகள், இந்த வழக்கு தொடர்பாக ஜூன் 20ம் தேதி விரிவான உத்தரவு பிறப்பிக்கப்படும் எனக் கூறி, விசாரணையை தள்ளி வைத்தனர். அன்றைய தினம் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கோர்ட்டில் ஆஜராகியிருக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டனர்.

- S. பிரகாசம்

# ஆடுகளை வெட்ட வேண்டாம்.. என் மீது கை வையுங்க: அண்ணாமலை சவால்!

டெல்லி செல்வதற்காக கோவை விமான நிலையம் வந்த பாஜக மாநில தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது பேசிய அவர் அண்ணாமலையும் ஆட்டுக்குட்டியும் என ஊடகங்களில் வெளியாவது குறித்து கேட்டதற்கு, அண்ணாமலை மீது கோபம் இருந்தால் என் மீது கை வையுங்கள், ஆட்டை அடிக்க வேண்டாம் என்றார்.

அதிமுக, பாஜக இணைந்து போட்டியிட்டால் 30 முதல் 35 இடங்களை தமிழகத்தில் வென்றிருக்க முடியும் என அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ் பி வேலுமணி கூறியது குறித்து கேட்டபோது, அதிமுகவுடன் மீண்டும் கூட்டணி வைக்க வாய்ப்பு இல்லை என தெரிவித்தார்.

மேலும் நடந்து முடிந்த மக்களவை தேர்தல் குறித்து, அதிமுக முன்னாள் அமைச்சர் எஸ் பி வேலுமணி, தவறான புள்ளி விவரங்களை கொடுத்துள்ளார் என்றார்.



கோவை மக்கள் அதிமுகவை புறக்கணித்து விட்டதாக கூறிய அண்ணாமலை, தற்போது நடந்து முடிந்த தேர்தலில், பாஜக அதிக எண்ணிக்கையில் வாக்குகளை பெற்றுள்ளதாக கூறினார்.

படிப்படியாகத்தான் வெற்றியை எட்ட முடியும் எனக் கூறிய அவர் பாஜக கோவையில் அதிகமாக வாக்குகள் பெற்று, இரண்டாம் இடத்தில் முன்னேறி உள்ளது என்றார்.

எடப்பாடி பழனிச்சாமி, எஸ்.பி வேலுமணி இடையே உட்கட்சி பூசல் நிலவி வருகிறது. அதை அவர்கள் முதலில் சரி செய்து கொள்ளட்டும் என தெரிவித்தார்.

- J. தனசேகர்,

# மக்களை அகற்றிவிட்டு வனம் அபகரிப்பா?: தி.மு.க., அரசுக்கு முருகன் கண்டனம்

மத்திய அமைச்சர் முருகன் அறிக்கை:

யானைகள் மற்றும் மனிதர்கள் இடையிலான மோதல்களை தவிர்க்கவும், யானைகளை பாதுகாக்கவும், வனத்துறை சார்பில் தமிழகம் முழுதும், 42 யானை வழித்தடங்கள் அடையாளம் காணப்பட்டு, அதுதொடர்பாக, 161 பக்க அறிக்கையை தமிழக அரசு வெளியிட்டு உள்ளது.

யானை வழித்தடங்களில் தனியார் விடுதிகள், நெடுஞ்சாலைகள், தேயிலை தோட்டங்கள், விவசாய நிலங்கள் மட்டும் அல்லாது, மக்கள் வசிக்கும் பகுதிகளும் உள்ளன.

வனத்துறையின் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்து, கருப்புக்கொடி ஏந்தி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தமிழகத்தில், 20 யானை வழித்தடங்களை மத்திய அரசு கண்டறிந்துள்ள நிலையில், தமிழக அரசால் அமைக்கப்பட்ட குழு, 42 வழித்தடங்களை கண்டறிந்துள்ளதாக கூறுகிறது.

சுற்றுச்சூழல், வனப்பகுதி பாதுகாப்பு விஷயத்தில், மத்திய அரசின் எந்த ஒரு வழிகாட்டு நெறிமுறைகளையும், தி.மு.க., அரசு பின்பற்றுவதாக தெரியவில்லை.

அறிக்கையை ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ளனர். சாதாரண மக்கள் இதை எப்படி படித்து புரிந்து கொள்வர். தேர்தல் நடத்தை விதி அமலில் இருக்கும் போது, அறிக்கையை வெளியிட வேண்டிய அவசியம் என்ன?



பல தலைமுறைகளாக வசிக்கும் மக்கள் ஒரு போதும், யானைகளின் வாழ்விடங்களையோ, வழித்தடங்களையோ ஆக்கிரமித்ததில்லை.

அவர்களை வெளியேற்றி விட்டு, தி.மு.க., குடும்ப உறுப்பினர்களுக்கு நெருக்கமான தொழிலதிபர்களுக்கு வழங்குவதற்காக தான், அவசரகதியில் யானை வழித்தடம் என்ற புதிய பீதியை தி.மு.க., அரசு செய்கிறதோ என்ற எண்ணம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

மக்களிடம் நேரடியாக சென்று கருத்து கேட்க வேண்டும்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

- Ba. சரவணன்

# நீர்த்துளிகளால் உடைக்கப்படும் இயற்கை தாதுக்கள் நானோ துகள்களை உருவாக்குவதாக ஐஐடி மெட்ராஸ் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்

சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழக (ஐஐடி மெட்ராஸ்) ஆராய்ச்சியாளர்கள் பொதுவான கனிமங்களை நீர் நுண்திவலைகளால் உடைக்கச் செய்து நானோ துகள்களை உருவாக்கிட முடியும் என நிரூபித்துள்ளனர். மதிப்புவாய்ந்த 'சயின்ஸ்' இதழில் வெளியிடப்படும் ஐஐடி மெட்ராஸ்-ன் முதலாவது ஆய்வுக் கட்டுரை இதுவாகும்.

மேகங்கள், மூடுபனி போன்ற வளிமண்டல நீர்த்துளிகளில் உள்ள அயனி இனங்கள் மற்றும் தொடர்பு மின்மயமாக்கல் மூலம் சார்ஜ் செய்யப்படலாம். தாதுக்களின் சிதைவு புதிய மூலக்கூறுகளை உருவாக்கி புதிய மேற்பரப்புகளை உருவாக்குகிறது. அத்தகைய மேற்பரப்புகளில் பல்வேறு வகையான வினையூக்கங்களும் ஏற்படக்கூடும். இந்த செயல்முறைகள் உயிர்வழித் தோற்றத்தில் முக்கியமானதாக இருக்கவும் வாய்ப்புள்ளது.

பூமியில் விழக்கூடிய நானோ துகள்கள், மூலக்கூறுகளால் ஆன 'நுண்ணிய நீர்த்துளிகள் விழுதல்' (microdroplet showers) என்பது கிரகத்தின் வேதியியல் மற்றும் உயிரியல் பரிணாம வளர்ச்சிக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.


சயின்ஸ் இதழானது அமெரிக்கன் அசோசியேஷன் ஃபார் தி அட்வான்ஸ்மெண்ட் ஆஃப் சயின்ஸ் எனப்படும் உலகின் மிகப் பழமையானதும், மிகப்பெரிய பொது அறிவியல் அமைப்பால் மதிப்பாய்வு செய்யப்படுவதாகும். பிரபல கண்டுபிடிப்பாளர் தாமஸ் எடிசன் வழங்கிய மூலதனத்துடன் 1880-ல் தொடங்கப்பட்ட பின்னர் முக்கிய அறிவியல் கண்டுபிடிப்புகளின் மையமாக இந்த அமைப்பு விளங்கி வருகிறது. அதிகளவில் மேற்கோள் காட்டப்பட்ட கட்டுரைகளில் தொடர்ந்து தரவரிசையில் இருக்கும் கட்டுரைகளைக் கொண்ட உலகின் தலைசிறந்த கல்வி இதழ்களில் ஒன்றாக சயின்ஸ் கருதப்படுகிறது.



பத்மஸ்ரீ விருதுபெற்றவரும் ஐஐடி மெட்ராஸ் வேதியியல் துறையின் நிறுவனப் பேராசிரியருமான தாளப்பில் பிரதீப், ஐஐடி மெட்ராஸ்-ல் பிஎச்டி முடித்த ஆராய்ச்சிக் கட்டுரையின் முதல் ஆசிரியரான செல்வி பி.கே.ஸ்பூர்த்தி ஆகியோர் தலைமையில் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

பெங்களூரு ஜவஹர்லால் நேரு மேம்படுத்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியரும், இந்திய அறிவியல் அகாடமியின் தலைவருமான உமேஷ் வி.வாக்மேரின் அறிவுரையின் கீழ், செல்வி கோயேன்ட்ரிலா தேப்நாத் கணக்கீட்டுப் பணிகளை மேற்கொண்டார். கண்டுபிடிப்புகள் அனைத்தும் 31 மே 2024 தேதியிட்ட சயின்ஸ் இதழில் வெளியிடப்பட்டுள்ளன. (DOI: 10.1126/science.adl3364)

இந்த ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை விளக்கிய ஐஐடி மெட்ராஸ் வேதியியல் துறையின் நிறுவனப் பேராசிரியர் தாளப்பில் பிரதீப், "நுண்துளிகள் ரசாயன எதிர்வினைகளை ஏற்படுத்தக் கூடியவை என்பதும், அதன் விளைவாக புதிய ரசாயனப் பிணைப்புகள்



உருவாவதும் நாம் அறிந்ததுதான். மைக்ரோ துளிகளால் ரசாயன பிணைப்புகளை உடைக்க முடியும் என்று எங்கள் எண்ணத்தில் தோன்றியதன் விளைவுதான் இந்த கண்டுபிடிப்புக்கு வழிவகுத்தது" எனக் குறிப்பிட்டார்.

இந்த ஆராய்ச்சியின் அடுத்தகட்டம் குறித்து விவரித்த அவர், "பாறைகளை இயற்கையான சிறுதுகள்களாக்கி மணலாக மாற்றுவது இயற்கையாக நடைபெறுகிறது. வெளிப்படையாகக் கூறினால், மண்ணுக்கு மணலை உருவாக்குவதற்கான வழியைக் கண்டுபிடித்துள்ளோம். எதிர்காலத்தில் போதிய வளங்களுடன் பாலைவனங்களிலும் பசுமையாக்க முடியும்" என்றார்.

ஐஐடி மெட்ராஸில் பிஎச்டி ஆராய்ச்சிக் கட்டுரையை அண்மையில் முடித்த முதல் ஆசிரியரான செல்வி பி.கே.ஸ்பூர்த்தி இந்த ஆராய்ச்சியின் பயன்பாடுகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார்.

இதன் செயல்பாடு குறித்து பேராசிரியர் உமேஷ் வி. வாக்மேர், "நீர் நுண்துளிகளுக்கு உள்ளார்ந்த சிக்கலான செயல்முறைகளை இந்த நிகழ்வு உள்ளடக்கியதாகும், அதன் செயல்முறையைப் புரிந்துகொள்வதன் மூலம் பல அடிப்படை அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்ள முடியும்" என்றார்.

- S. ராதிகா

# உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி காற்றின் தரக்கண்காணிப்பு முறை, ஏர் ப்ரவாஹ் செயலி ஆகியவை தொடங்கிவைக்கப்பட்டன

உலக சுற்றுச்சூழல் தினத்தையொட்டி காற்றின் தரக்கண்காணிப்பு முறை, ஏர் ப்ரவாஹ் செயலி ஆகியவற்றை இன்று புதுதில்லியில் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலாளர் திரு எஸ் கிருஷ்ணன் தொடங்கி வைத்தார். இவை இந்த அமைச்சகத்தின் தொழில்நுட்பங்களுடன் உருவாக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய திரு கிருஷ்ணன், இந்த தரக்கண்காணிப்புக் கருவி, மிகவும் குறைந்த செலவிலானது. தொழிற்சாலைகளில் தேவையைப் பொறுத்து 3 விதங்களில் கிடைக்கும் என்று கூறினார். இந்தக் கருவி முழுமையாக பரிசோதிக்கப்பட்டு காற்றின் பல்வேறு நிலைகளை ஆய்வு செய்யத்தக்கது



என்றும் அவர் தெரிவித்தார்.

ஏர் ப்ரவாஹ் என்னும் செல்பேசி செயலி நிகழ்நேர காற்றின் தரக்குறியீட்டைக் கண்காணிப்பதாகும். இது ஆன்ட்ராய்டு ப்ளே ஸ்டோர்களில் கிடைக்கும்.

- பா.அசோக்குமார்

# பெயர் சொல்லி அழைக்கும்



பல ஆண்டுகளாக, யானைகளைப் படிக்கும் ஆராய்ச்சியாளர்கள் ஒரு புதிரான நிகழ்வைக் கவனித்திருக்கிறார்கள். சில நேரங்களில் ஒரு யானை மற்ற யானைகளின் குழுவிடம் குரல் கொடுக்கும்போது, அவை அனைத்தும் பதிலளிக்கின்றன. ஆனால் சில சமயங்களில் அதே யானை குழுவிற்கு இதே போன்ற அழைப்பு விடுக்கும்போது, ஒரு தனி நபர் மட்டுமே பதிலளிக்கிறார்.

யானைகள் ஒருவரையொருவர் பெயருக்கு நிகரான பெயரால் அழைக்க முடியுமா? கென்யாவில் உள்ள காட்டு ஆப்பிரிக்க சவன்னா யானைகளை உள்ளடக்கிய ஒரு புதிய ஆய்வு இந்த யோசனைக்கு ஆதரவளிக்கிறது.

அம்போசெலி தேசிய பூங்கா மற்றும் சம்பூர் தேசிய ரிசர்வ் ஆகியவற்றில் 100 க்கும் மேற்பட்ட யானைகளால் உருவாக்கப்பட்ட குரல்களை - பெரும்பாலும் யானைகள் தங்கள் குரல் நாண்களைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் குரல்களை ஆராய்ச்சியாளர்கள் பகுப்பாய்வு செய்தனர்.

இயந்திர கற்றல் மாதிரியைப் பயன்படுத்தி, இந்த அழைப்புகளில் ஒரு குறிப்பிட்ட யானையை உத்தேசித்துள்ள முகவரியாக அடையாளம் காணும் பெயர் போன்ற கூறு எது என்று ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். ஆராய்ச்சியாளர்கள் 17 யானைகளுக்கு ஒலியை இயக்கினர், அவை வெளிப்படையாக அழைக்கப்பட்ட அழைப்பு மற்றும் வேறு சில யானைகளுக்கு அழைக்கப்பட்ட அழைப்புக்கு அவை எவ்வாறு பதிலளிக்கும் என்பதை சோதிக்க.

யானைகள் அவற்றிற்கு அனுப்பப்பட்ட அழைப்புகளுக்கு சராசரியாக மிகவும் வலுவாக பதிலளித்தன. அவர்கள் அத்தகைய அழைப்பைக் கேட்டதும், அவர்கள் மிகவும் உற்சாகமாக நடந்துகொள்ளவும், ஆடியோ மூலத்தை நோக்கி நடக்கவும், வேறொருவருக்காகத் தோன்றியதைக் கேட்டதை விட அதிகமான குரல்களை எழுப்பவும் முனைந்தனர்.

நேச்சர் எக்காலஜி & எவல்யூஷன் இதழில் வெளியிடப்பட்ட ஆய்வின் முதன்மை ஆசிரியரான கார்னெல் பல்கலைக்கழகத்தின் நடத்தை சூழலியல் நிபுணரும் கொலராடோ ஸ்டேட் யுனிவர்சிட்டியின் முன்னாள் ஆசிரியருமான மிக்கி பார்டோவின் கூற்றுப்படி, யானைகள் "ஒருவரையொருவர் பெயரால் அழைக்கின்றன" என்று ஆய்வின்

# யானைகள்!

## சமீபத்திய ஆய்வு

கண்டுபிடிப்புகள் சுட்டிக்காட்டுகின்றன.

“நிச்சயமாக, இந்த வழியில் ஒருவருக் கொருவர் உரையாட, யானைகள் குறிப்பிட்ட ஒலிகளை குறிப்பிட்ட நபர்களுடன் தொடர்பு படுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும், பின்னர் கேள்விக்குரிய நபரின் கவனத்தை ஈர்க்க அந்த ஒலிகளைப் பயன்படுத்த வேண்டும், இதற்கு அதிநவீன கற்றல் திறன் மற்றும் சமூக உறவுகளைப் பற்றிய புரிதல் தேவை.” பார்டோ கூறினார்.

“யானைகள் ஒருவரையொருவர் தனிநபர்களாகக் குறிப்பிடுவது சமூகப் பிணைப்புகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது - குறிப்பாக, பலவிதமான சமூகப் பிணைப்புகளைப் பேணுதல் - இந்த விலங்குகளுக்கு” என்று பார்டோ மேலும் கூறினார்.

பூமியின் மிகப்பெரிய நில விலங்குகளான யானைகள் அதிக புத்திசாலித்தனம் கொண்டவை, அவை மிகுந்த நினைவாற்றல் மற்றும் சிக்கலைத் தீர்க்கும் திறன் மற்றும் அதிநவீன தகவல் தொடர்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளன. ஒருவரையொருவர் வாழ்த்தும் போது அவர்கள் சிக்கலான நடத்தையில் - காட்சி, ஒலி மற்றும் தொட்டுணரக்கூடிய சைகைகளில் ஈடுபடுவதாக முந்தைய ஆராய்ச்சி காட்டுகிறது.

“எங்களுக்கு முழுமையாகத் தெரியாது, ஆனால் எங்கள் பகுப்பாய்விலிருந்து, யானை மற்றொரு நபரை அழைக்கும் தொடர்பு அழைப்புகளின் போது இது பொதுவாகத் தோன்றும் - பெரும்பாலும் பெயரால்,” என்று கொலராடோ மாநில பல்கலைக்கழக பாதுகாப்பு உயிரியலாளரும் ஆய்வு இணை ஆசிரியருமான ஜார்ஜ் விட்டெமியர் கூறினார். பாதுகாப்புக் குழுவின் சேவ் தி எலிஃபண்ட்ஸ்.

“ஒரு தாய் தனது கன்றுகளுக்கு சத்தமிடுவதும், அடிக்கடி அவர்களை அமைதிப்படுத்துவது அல்லது அவர்களுடன் சோதிப்பதும் பொதுவானது. வாழ்த்து விழாக்களில் அதைக் கண்டுபிடிப்போம் என்று நாங்கள் நினைத்தோம், ஆனால் அந்த வகையான குரல்களில் இது குறைவாகவே இருந்தது,” என்று விட்டெமியர் மேலும் கூறினார்.

தனிப்பட்ட-குறிப்பிட்ட குரல் லேபிள்கள் - பெயர்கள் - அரிதானது, ஆனால் முன்னோடி-யில்லாதது, விலங்கு இராச்சியத்தில். டால்பின்களும் கிளிகளும் இதைச் செய்வதாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் அதைச் செய்யும்போது, மற்ற விலங்குகளின் குரல்களைப் பின்பற்றுகிறார்கள். யானைகளில், குரல் லேபிள்கள் முகவரியாளர் எழுப்பும் ஒலிகளை வெறுமனே பின்பற்றுவதில்லை.

“அதற்கு பதிலாக, அவர்களின் பெயர்கள் மனித பெயர்களைப் போலவே தன்னிச்சையாக இருப்பதாகத் தெரிகிறது” என்று பார்டோ கூறினார். “தன்னிச்சையான பெயர்களைக் கொண்ட நபர்களை உரையாற்றுவதற்கு ஓரளவு சுருக்க சிந்தனைக்கான திறன் தேவைப்படுகிறது.”

“யானைகள் எவ்வளவு புத்திசாலித்தனமான மற்றும் சுவாரஸ்யமானவை என்பதை இந்த வேலை எடுத்துக்காட்டுகிறது என்று நான் நினைக்கிறேன், மேலும் அவற்றின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பில் அதிக ஆர்வத்தை ஏற்படுத்தும் என்று நான் நம்புகிறேன்,” என்று விட்டெமியர் மேலும் கூறினார்.

**ஒரு நாள் மக்கள் யானைகளுடன் “பேச” முடியுமா?**

“அது அருமையாக இருக்கும், ஆனால் நாங்கள் அதிலிருந்து வெகு தொலைவில் இருக்கிறோம்,” என்று விட்டெமியர் கூறினார். “யானை குரல்கள் தகவல்களை குறியாக்கம் செய்யும் தொடரியல் அல்லது அடிப்படை கூறுகளை நாங்கள் இன்னும் அறியவில்லை. அவற்றைப் புரிந்துகொள்வதில் ஆழமான முன்னேற்றம் அடைவதற்கு முன்பு நாம் அதைக் கண்டுபிடிக்க வேண்டும்.”

- S. ராதிகா

# பிரக்ஞானந்தாவுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் வாழ்த்து!



செஸ் போட்டியில் சாதனை படைத்த தமிழக வீரர் பிரக்ஞானந்தாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தனது எக்ஸ் பக்கத்தில், “நார்வே செஸ் தொடரில் முற்றிலும் வியத்தகு ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார் இளம் வீரர் பிரக்ஞானந்தா!. மூன்றாம் சுற்றில் உலகின் முதல்நிலை ஆட்டக்காரரான மேக்னஸ் கார்ல்சனை வென்றதோடு, தற்போது ஐந்தாம் சுற்றில் உலகின் மூன்றாம் நிலை ஆட்டக்காரரான பேபியானோ கருவானாவையும் ‘கிளாசிக்கல் செஸ்’ வகைப் போட்டியில் வீழ்த்தியிருப்பதென்பது மிகப்பெரும் சாதனையாகும்.

டாப்-10 தரவரிசைக்குள் நுழைந்திருக்கும் உங்கள் வரவு நல்வரவாகட்டும், பிரக்ஞானந்தா! ஒட்டுமொத்த செஸ் உலகமும் உங்களின் திறனையும் சாமர்த்தியத்தையும் கண்டு வியப்பில் ஆழ்ந்துள்ளது!” என்று வாழ்த்தியுள்ளார்.

**- தமிழ்வீரன்**


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | ₹ 240/- |

Administrative Office:

**PENA KURAL**
**3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,**
**OMR, Chennai, Tamil Nadu, India - 600097.**
**Ph: 044-35906002, 9962245338**
**Email: penakural@yahoo.com**

PENA KURAL TAMIL MONTHLY

UPI Number:
9962245338



வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் - ல் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
S D A
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance
Available
Rs.12,999/-
Compo Offer
Rs.2250/-
Rs.999/-
Rs.3699/-
Compo Offer
Rs.3999/-
Compo Offer
Compo Offer
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.

# இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி

## 2023 - 24 நிதி ஆண்டில் 8.2 சதவீதமாக அதிகரிப்பு!




இந்தியாவின் ஜி.டி.பி 8%ஐ கடந்தது; "பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மூன்றாவது ஆட்சியில் இந்தியாவின் வளர்ச்சி வேகம் தொடரும்," என்று நிர்மலா சீதாராமன் எக்ஸ் தளத்தில் பதிவு.

இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP – ஜி.டி.பி) ஜனவரி-மார்ச் மாதங்களில் 7.8 சதவீதத்தால் ஆச்சரியமாக வளர்ந்தது, இது 2023-24 நிதியாண்டில் முழு ஆண்டு வளர்ச்சி விகிதத்தை 8.2 சதவீதமாகக் கொண்டு சென்றது, இது தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக 7 சதவீத வளர்ச்சியைக் கொண்டுள்ளது என தேசிய புள்ளியியல் அலுவலகம் (NSO) வெளியிட்ட தரவு.

உற்பத்தி, கட்டுமானம், பொது நிர்வாகம், பாதுகாப்பு மற்றும் இதர சேவைகளால் ஊக்கப் படுத்தப்பட்ட 7.8 சதவீத நான்காவது காலாண்டு வளர்ச்சி விகிதம், பொருளாதார வல்லுனர்களின் மிக உயர்ந்த மதிப்பீடான 7.3-7.4 சதவீதத்தை விட அதிகமாக இருந்தது. மேலும் முழு ஆண்டு வளர்ச்சி விகிதம் 8.2 சதவீதம் என்பது ரிசர்வ் வங்கியால் (RBI) மதிப்பிடப்பட்ட 7 சதவீதம் மற்றும் 2023-24க்கான என்.எஸ்.ஓ இரண்டாவது முன்கூட்டிய மதிப்பீடான 7.6 சதவீதத்தை விட அதிகமாக உள்ளது.

இந்த மாத தொடக்கத்தில், தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.அனந்த நாகேஸ்வரன், 2024ஆம் நிதியாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 8 சதவீதத்தைத் தொடுவதற்கான "அதிக சாத்தியம்" இருப் பதாகக் கூறியிருந்தார். சமீபத்திய ஜி.டி.பி அளவு குறித்து கருத்து தெரிவித்த மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், இது "வலுவான பொருளாதார வளர்ச்சியை" பிரதிபலிக்கிறது என்றார்.

"2023-24 ஆம் ஆண்டில் உற்பத்தித் துறை 9.9 சதவீத வளர்ச்சியைக் கண்டது என்பது கவனிக்கத்தக்கது, இந்தத் துறைக்கான மோடி

அரசாங்கத்தின் முயற்சிகளின் வெற்றியை எடுத்துக்காட்டுகிறது. பல உயர் அதிர்வெண் குறிகாட்டிகள், உலகளாவிய சவால்களுக்கு மத்தியிலும் இந்தியப் பொருளாதாரம் தொடர்ந்து மீள்தன்மையுடனும் உற்சாகத் துடனும் இருப்பதைக் குறிக்கிறது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மூன்றாவது ஆட்சியில் இந்தியாவின் வளர்ச்சி வேகம் தொடரும்," என்று ஜி.டி.பி அளவு வெளியான பிறகு நிர்மலா சீதாராமன் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

நுகர்வு செலவினங்களின் மெதுவான வளர்ச்சி குறித்த கேள்விக்கு, ஒரு ஆதாரம் கூறியது, "பொதுவாக, பொருளாதாரத்தின் அனைத்து துறைகளும் ஒரே நேரத்தில் வளர்வது மிகவும் அரிது. ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதங்களை நீங்கள் பார்க்க வேண்டும். மேலும் சில துறைகள் முற்றிலுமாக தேக்கமடைந்தால் மட்டுமே, கவலைக்கு ஒரு காரணம் இருக்க வேண்டும். ஆனால், சிறந்த பருவமழை மற்றும் கிராமப்புற வருமானம் அதிகரிப்பதன் மூலம், FY24-ஐ விட FY25-ல் தனியார் இறுதி நுகர்வு செலவினங்களில் விரைவான வளர்ச்சி விகிதத்தைக் காண்போம் என்று நாங்கள் நம்புகிறோம்."

அரசாங்க செலவினங்கள் வளர்ச்சியை தொடர்ந்து ஆதரிக்கின்றன, அதாவது நான்காவது காலாண்டில் ஆண்டுக்கு ஆண்டு 0.9 சதவீதம் உயர்ந்தது, அதே சமயம் மொத்த நிலையான மூலதன உருவாக்கத்தில் (GFCF) பிரதிபலிக்கும் முதலீடுகள், ஒரு வலுவான அளவாக 6.5 சதவிகிதம் வளர்ந்தது. நான்காவது காலாண்டின் ஜி.டி.பி வளர்ச்சி விகிதம் எதிர்பார்த்ததை விட அதிகமாக இருந்தபோதிலும், தனியார் இறுதி நுகர்வுச் செலவினம் வெறும் 4 சதவீத வளர்ச்சியுடன் அனைத்து காலாண்டுகளிலும் மிகக் குறைவாக இருந்தது. நுகர்வு தேவைக்கான குறிகாட்டியாக, தனியார் இறுதி நுகர்வுச் செலவினம் ஜி.டி.பி.,யின் பங்காக 52.9 சதவீதமாகக் குறைந்தது, இது 2011-12 அடிப்படை ஆண்டுத் தொடரின் மிகக் குறைந்த நிலையாகும்.

முழு நிதியாண்டில், மூலதன உருவாக்கம் 9 சதவீத வளர்ச்சி விகிதத்தை பதிவு செய்துள்ளது, அதே நேரத்தில் அரசாங்க செலவினம் 2.5 சதவீதமாக வளர்ந்துள்ளது. நுகர்வுச் செலவு 4 சதவீதம் அதிகரித்துள்ளது, இது தொற்றுநோய் ஆண்டைத் தவிர்த்து கடந்த இரண்டு தசாப்தங்களில் மிகக் குறைந்த வளர்ச்சி விகிதம் ஆகும்.


முந்தைய காலாண்டில் 6.8 சதவீதமாகவும், 23ஆம் நிதியாண்டின் நான்காவது காலாண்டில் 6 சதவீதமாகவும் இருந்த மொத்த மதிப்பு கூட்டப்பட்ட (GVA) விதிமுறைகளின் வளர்ச்சி விகிதம் ஜனவரி-மார்ச் மாதங்களில் 6.3 சதவீதமாக குறைந்துள்ளது. முழு நிதியாண்டான FY24 இல், ஜி.வி.ஏ வளர்ச்சி FY23 இல் 6.7 சதவீதத்திலிருந்து 7.2 சதவீதமாக பதிவு செய்யப்பட்டது. ஜி.டி.பி என்பது ஜி.வி.ஏ மற்றும் நிகர தயாரிப்பு வரிகளின் கூடுதலாகும் (வரிகள் - மானியங்கள்).

ஜி.வி.ஏ மற்றும் ஜி.டி.பி விகிதங்களுக்கு இடையே உள்ள பரந்த வேறுபாடு, நிகர வரிகளின் கூர்மையான அதிகரிப்பின் காரணமாகக் காணப்படுகிறது, முதன்மையாக கடந்த காலாண்டில் அதிக வரிகள் மற்றும் குறைந்த மானியங்கள் வெளியேறியதைக் குறிக்கிறது. நிகர தயாரிப்பு வரிகள் முந்தைய காலாண்டில் 31.2 சதவீத வளர்ச்சி மற்றும் முந்தைய ஆண்டின் 7.7 சதவீத வளர்ச்சி-யிலிருந்து 22.2 சதவீத வளர்ச்சியை FY24 நான்காவது காலாண்டில் பதிவு செய்தன.

முந்தைய நிதியாண்டின் நான்காவது காலாண்டில், துறைகளில், இரண்டாம் நிலைத் துறை 8.8 சதவீத வளர்ச்சி விகிதத்தைப் பதிவு செய்தது, உற்பத்தித் துறை அதிகபட்ச ஜி.வி.ஏ வளர்ச்சி விகிதமான 8.9 சதவீதத்தையும், கட்டுமானத் துறை 8.7 சதவீத வளர்ச்சியையும் பதிவு செய்தது. முதன்மைத் துறையில், ஜனவரி-மார்ச் மாதங்களில் விவசாயம் 0.6 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ள நிலையில், சுரங்கத் துறை 4.3 சதவீத வளர்ச்சியை

- ந. மதிவாணன்






# வ.உ.சி. ஆய்வு வட்டம் தமிழ்நாடு

(V.O.C. Research Centre Tamilnadu)

ஆய்வு வட்ட வெளியீடுகள்





### நோக்கம்

வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்களின் வரலாறு, படைப்புகள், பணிகள் ஆகியவற்றைப் பல்வேறு வடிவங்களில் அடுத்தடுத்த தலைமுறைக்கு கொண்டுசேர்ப்பதே.

### பணிகள்

- வ.உ.சி. பிறந்த நாள், நினைவு நாள், திருநெல்வேலி எழுச்சி நிகழ்ந்த நாளில் விழா எடுப்பது;
- பள்ளி, கல்லூரிகளில் போட்டிகள், உரையரங்குகளை நடத்துவது;
- வாய்ப்புள்ள பொது இடங்களில் கூட்டங்கள் நடத்துவது;
- பயிலரங்கங்கள் நடத்துவது;
- மாவட்டம் தோறும் வ.உ.சி. ஆய்வு வட்டக் குழுக்களை அமைத்து மேற்கண்ட பணிகளை விரிவுபடுத்துவது.

மேலுள்ள பணிகளை கடந்த 3 ஆண்டுகளாக வெற்றிகரமாக வ.உ.சி. ஆய்வு வட்டம் செயல்படுத்தி வருகிறது. தொடர்ந்து செயல்படுத்த வ.உ.சி. மீது பற்றும் அர்ப்பணிப்புள்ள அன்பர்களும், போதிய நிதி வசதியும் தேவை.

வ.உ.சி. ஆய்வு வட்டம் மீது நம்பிக்கை உள்ளவர்கள் தாமாக விருப்பப்பட்டு

**ஆண்டுக் கட்டணம் ரூ.1000**

அல்லது

**ஆயுள் கட்டணம் ரூ.5000**

**India Post Payments Bank (IPPB)**

**A/c No. 048610195518**

**(IFSC: IPOS0000001)**

வங்கி எண்ணிற்கு இணைய வழியிலோ அல்லது GPay வழியாகவோ ஆய்வு வட்ட உறுப்பினர் கட்டணத்தைச் செலுத்தலாம்.

இந்த அஞ்சலக வங்கிக் கணக்கிற்கு பணம் செலுத்துபவர்கள், செலுத்திய விவரத்தை தனியாக என்னுடைய புலன எண்ணுக்கு (9382135385) கட்டண விவரம், முழுப்பெயர், தொடர்பு முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை அனுப்பி உதவ வேண்டும்.

**ஒப்பற்ற தியாகி வ.உ.சி. புகழ் பரப்ப அழைக்கிறோம்!**

# தைலமர காடுகளை காப்புக் காடுகளாக மாற்ற கோரிக்கை



சிவகங்கை மாவட்டத்தில் உள்ள வன உயிரினங்களை பாதுகாக்க காப்புக்காடுகளை வனத்தோட்டக் கழகத்திடமிருந்து திரும்ப பெற்று இயற்கையான வனங்களை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென வன உயிரின ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

சிவகங்கை மாவட்டத்தில் வன உயிரினங்களில் முதன்மையாக உள்ளது புள்ளிமான்கள். 25 ஆண்டுகளுக்கு முன் ஏராளமான மான்கள் இருந்தன. தற்போது வேட்டையாடுதல் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டதாலும், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்பட்டதாலும் புள்ளிமான்கள் எண்ணிக்கை பல ஆயிரத்தை தாண்டியுள்ளது.

மாவட்டத்தில் பரவலாக குறுங்காடுகளே உள்ளன. மான்கள் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதற்கேற்ப காடுகளின் பரப்பு அதிகரிக்கவில்லை

தற்போது மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பான 4.18 லட்சம் எக்டேரில் வனப்பரப்பு 16.5 ஆயிரம் எக்டேர் மட்டுமே. அதில் காப்புக்காடுகளில் நல்ல நீர்வளம் உள்ள 35 ஆயிரம் ஏக்கரில் இயற்கையான காடுகளே இல்லை. அந்த வனப்பரப்பு தமிழ்நாடு வனக்கழகத்திற்கு குத்தகை விடப்பட்டுள்ளது.

அதில் யூகலிப்ட்ஸ், முந்திரி மரங்கள் வளர்க்கப்பட்டு, சில ஆண்டுகளில் வெட்டப்பட்டு, மீண்டும்நடப்படுகிறது. இதனால் தொடர்ந்து தொழிலாளர்கள் நடமாட்டம் அப்பகுதியில் நிலவுவதும், இயற்கையாக வளரும்செடிகள் அகற்றப்படுவதும் தொடர்கிறது.

அப்பகுதியில் புற்கள், குறுஞ்செடிகள் வளர்வதற்கான வாய்ப்பு இல்லாமல் போய் விட்டது. மேலும் மழைநீர் புரண்டோடும் சிறு ஓடைகளும் அழிந்து நிலத்தடி நீர் வளமும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதியில் இந்த மரங்கள் நடவிற்கு முன்பாக வசித்த நரி, தேவாங்கு, மரநாய், ஓநாய், காட்டுப்பூனை உள்ளிட்டவை அழிந்து விட்டன. தற்போது அதில் அரிதாக மான்கள் மட்டும் பெருகி வருகின்றன. அதற்கேற்ப அதன் வாழிடம் இல்லை.

இதனால் நீர் மற்றும் தீவனப்பற்றாக் குறையால் வேறு இடங்களுக்கு செல்லும் போது குடியிருப்பு, தனியார் தோட்டங்களில் நாய்களால் கடிக்கப்பட்டு உயிரிழந்து வருகின்றன. வேலிகளில் சிக்கியும் காயமடைகின்றன.

வன உயிரினங்கள் பாதுகாப்பாக வாழ நிரந்தர நடவடிக்கையாக காப்புக்காடுகள் அதிகரிக்கப் பட வேண்டும். மான்களைக் காப்பாற்ற காப்புக்காடுகளை மான்கள் உள்ளிட்ட வன உயிரினங்களின் வாழிடமாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போது காப்புக்காடுகளில் வனத் தோட்ட கழகத்தின் குத்தகையை ரத்து செய்து இயற்கையான தாவரங்கள் வளரும் இடமாக மாற்ற வேண்டும்.

இல்லாவிட்டால் சிவகங்கை மாவட்டத்தின் வன உயிரினங்கள் பாதிக்கப்படுவதுடன், வனப்பரப்பு வெறும் வரைபடத்தில் மட்டும் இருக்கும். மாவட்டத்தின் இயற்கை சமச்சீர் முற்றிலுமாக பாதிக்கப்படும் என்ற வன உயிரின ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

- K. சுபுலட்சுமி

# கல்வித் துறையில் தரமான மாற்றங்களை ஏற்படுத்தும் தமது உறுதிப்பாட்டை பிரதமர் மீண்டும் வலியுறுத்தினார்

கல்வித் துறையில் தரமான மாற்றங்களுக்கான தனது உறுதிப்பாட்டைப் பிரதமர் திரு நரேந்திர மோடி மீண்டும் வலியுறுத்தியுள்ளார். கியூ.எஸ் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையில் இந்தியப் பல்கலைக்கழகங்களின் செயல்திறன் மேம்பட்டிருப்பது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

கியூ.எஸ் உலகப் பல்கலைக்கழகப் தரவரிசையில் இந்தியப் பல்கலைக்கழகங்களின் செயல்திறனில் ஏற்பட்டுள்ள தொடர்ச்சியான முன்னேற்றம் குறித்து கியூ.எஸ் குவாக்கரெல்லி சைமண்ட்ஸ் லிமிடெட் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் மேலாண் இயக்குநர் திரு நுன்சியோ குவாக்கரெல்லியின் பதிவிற்கு பதிலளித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் கூறியிருப்பதாவது:

“கடந்த தசாப்தத்தில், கல்வித் துறையில் தரமான மாற்றங்களில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம். இது கியூ.எஸ் உலகப் பல்கலைக்கழகத் தரவரிசையில் பிரதிபலிக்கிறது. மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிறுவனங்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்குப் பாராட்டுகள். இந்தக் காலகட்டத்தில், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளை அதிகரிக்க இன்னும் அதிகமாகப் பணியாற்ற விரும்புகிறோம்.”

- இளைய தர்ஷினி

# கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய வழக்கு சி.பி.சி.ஐ.டி., விசாரணைக்கு மாற்றம்

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமாக விற்கப்பட்ட மெத்தனால் கலந்த கள்ளச்சாராயம் குடித்ததால் 193 பேர் கடுமையான உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்ட நபர்களுக்கு கள்ளக்குறிச்சி, விழுப்புரம், சேலம், புதுச்சேரி மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராயம் உயிரிழப்பு சம்பவம் தமிழ்நாட்டில் பெரும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது. இதன் எதிரொலியாக தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் கள்ளச்சாராயம் விற்பனை தொடர்பாக சோதனை மேற்கொள்ளப்பட்டு, கைது நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

கள்ளச்சாராயம் அருந்தியவர்களில் தற்போது வரை 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மருத்துவமனைகளில் நூற்றுக்கும் மேற்பட்டோர் சிகிச்சையில் உள்ளனர்.

கள்ளச்சாராய உயிரிழப்புகள் பற்றிய வழக்கு சி.பி.சி.ஐ.டி., விசாரணைக்கு மாற்றப்பட்டுள்ளது.



கள்ளச்சாராயத்தை விற்பனை செய்த வழக்கில், தேடப்பட்டு வந்த சிவக்குமார் என்ற முக்கிய குற்றவாளியை சென்னையில் போலீசார் கைது செய்தனர்.

கள்ளச்சாராயம் தயாரிக்க மெத்தனால் விநியோகம் செய்ததாக, எம்.ஜி.ஆர். நகரில் பதுங்கியிருந்த இவரை, மதுவிலக்கு மற்றும் அமலாக்க பிரிவு போலீசார் கைது செய்துள்ளனர். இதுவரை 11 பேரை சி.பி.சி.ஐ.டி., போலீஸார் கைது செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

- V. கண்ணபிரான்

# இன்ஸ்டாகிராம்-ல் இன்றைய இளைஞர்களின் சமூக வாழ்க்கையை சீரழிக்கிறதா?



இன்ஸ்டாகிராம் மட்டுமல்ல. சமூக வலைப்பின்னல் இளைஞர்களின் சமூகத் திறன்களை நேரடியாகப் பாதிக்கிறது என்பது மட்டுமல்லாமல், அவர்கள் நேரில் சொல்லாத விஷயங்களைச் சொல்லவும் உதவுகிறது. அவற்றுக்கிடையே ஒரு திரையை வைப்பது, மோசமான விஷயங்களைச் சொல்ல அனுமதிக்கிறது. வெளிப்படையாக இது ஒரு மோசமான விஷயமாக இருக்கலாம். ஆனால், நாம் உணர வேண்டிய விஷயம் என்னவென்றால், இதுபோன்ற வெகுஜன மற்றும் எளிதான தொடர்பு இதற்கு முன் மனித வரலாற்றில் நிகழ்ந்ததில்லை.

பின்னர், இந்த அதிகாரத்தை 6-16 வயதுடையவர்களின் கைகளில் வைப்பது அதன் விளைவுகளை ஏற்படுத்துகிறது, பெற்றோர்கள் தங்கள் குழந்தை பயன்படுத்தும் சமூக ஊடகங்களின் பயன்பாட்டைக் கண்காணிக்க வேண்டும் அல்லது கட்டுப்படுத்த வேண்டும். இன்ஸ்டாகிராமும் சமூக வலைதளமும் இன்றைய இளைஞர்களை சீரழிக்கிறது.

இன்ஸ்டாகிராமில் நாளுக்கு நாள் இளைஞர்களின் ஈடுபாடு அதிகமாகிக்கொண்டே தான் இருக்கிறது. இன்ஸ்டாகிராமில் எந்த அளவு வணிக ரீதியாகவும், நண்பர்களுடன் பேசவும், பொழுது போக்கும் செயலியாக இருந்தாலும் அதில் சில ஆபத்துகளும் இருக்கிறது.

பெண்களுக்கு ஆபாசமான மெசேஞ்களும், தகாத வார்த்தையை பயன்படுத்தி திட்டுவதும், கேளி செய்வதும், பாலியல் ரீதியாக தொல்லை கொடுப்பதும் என தினமும் நடந்துக்கொண்டு தான் இருக்கிறது.

இதற்கு தீர்வு காணும் வகையில் இன்ஸ்டாகிராம் லிமிட் மற்றும் ரெஸ்டிரிக்ட் இரண்டு புதிய பாதுகாப்பு அம்சத்தை கொண்டுவந்துள்ளனர். இந்த அம்சத்தின் மூலம் நமது போஸ்டை யார் காணலாம், யார் மெசேஜ், கமண்ட், டேக் செய்வது என்பதை



நாம் முடிவெடுக்கலாம். நாம் பார்க்க கூடாது என்று நினைக்கும் நபர் நமது புகைப்படத்திற்கு கமெண்ட், மெசேஜ்கள் செய்தாலும் அது நமக்கோ பிறர்கோ காண்பிக்காது. நிர்வாண புகைப்படங்களை தெரியாத நபருக்கு அனுப்பினால் அது இன்ஸ்டாகிராம் தானாகவே மறைத்துவிடும் என இந்த அம்சத்தை இளைஞர்களின் பாதுகாப்புகாக முன்னெடுத்து அறிமுகப்படுத்தியுள்ளனர்.

- P. கார்த்திகேயன்

# வன உயிரினங்கள் குறித்த திரைப்படங்களின் இயக்குநர் திரு சுப்பையா நல்லமுத்து, 18வது மும்பை சர்வதேச திரைப்பட விழாவின் வி.சாந்தாராம் வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு தேர்வு பெற்றுள்ளார்






18-வது மும்பை சர்வதேச திரைப்பட விழாவின் வி சாந்தாராம் வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு பிரபல வன உயிரினங்கள் குறித்த திரைப்பட இயக்குநர் திரு சுப்பையா நல்லமுத்து தேர்வு செய்யப்பட்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

தேசிய திரைப்பட வளர்ச்சிக் கழக வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், "இந்தப் பதிப்பில் மதிப்புமிக்க விருதை வென்ற நல்லமுத்துவை நான் வாழ்த்துகிறேன்" என்று கூறினார். வன உயிரின திரைப்படங்களில் அவரது குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் திரு சுப்பையா நல்லமுத்துவுக்கு எம்ஐஎஃப்எஃப் இந்த விருதை வழங்குகி கௌரவித்துள்ளது. மும்பையின் நாரிமன் பாயின்ட் பகுதியில் உள்ள நிகழ்த்து கலைகளுக்கான தேசிய மையத்தில் நடைபெற்ற, கதையல்லாத திரைப்படத்திற்கான தெற்காசியாவின் மிகப்பெரியதும், பழமையானதும் என அறியப்படுகின்ற மும்பை சர்வதேச திரைப்பட விழாவின் பிரமாண்ட தொடக்க நிகழ்வில் இந்த விருது திரு சுப்பையா நல்லமுத்துக்கு வழங்கப்பட்டது. இந்த விருது வனவிலங்குகள் குறித்த திரைப்படத் தயாரிப்பில் அவரது மிகச்சிறந்த பங்களிப்புக்கான அங்கீகாரமாகும்.

இந்தியத் திரைப்பட மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தின் முன்னாள் மாணவரான திரு சுப்பையா நல்லமுத்து சுற்றுச்சூழல் பற்றிய தொடர்களுக்காக பாண்டா விருது பெற்றவர். லிவிங் ஆன் தி எட்ஜ் என்ற இவரது படைப்பு மிகுந்த முக்கியத்தும் வாய்ந்ததாகும். அதிவிரைவு கேமராமேன் என்ற நிலையில் இவரது நிபுணத்துவம் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தில் பணி வாய்ப்பை அளித்தது. வனவிலங்குகளை படம் படிப்பதில் அவரது அபரிமிதமான பங்களிப்பு உலகளாவிய பாராட்டைப் பெற்றுத்தந்துள்ளது.

ராயல் பெங்கால் புலி மீதான அவரது ஆர்வம் புலியை மையப்படுத்திய ஐந்து ஆவணப்படங்களாக மாற்றம் கொண்டது. இந்தப் படங்கள், பிபிசி, நேஷனல் ஜியாகிரஃபிக் சேனல் ஆகியவற்றுக்காக தயாரிக்கப்பட்டன.

டைகர் டைனாஸ்டி (2012-2013), டைகர் குயின் (2010), தி வேர்ல்ட்ஸ் மோஸ்ட் ஃபேமஸ் டைகர் (2017) உள்ளிட்டவை இவரது மிகச்சிறந்த படைப்புகளாகும். சுற்றுச்சூழல் குறித்தும், மனிதர்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு இடையேயான உரையாடல்கள் குறித்தும் ஏராளமான ஆவணப்படங்களை இவர் தயாரித்துள்ளார். இவற்றில் எர்த் ஃபைபல் (2000) என்பதை பிபிசி வேர்ல்ட் நிறுவனத்திற்காகவும் தி வேர்ல்ட் கான் ஒயில்ட் (2001) என்பதை அனிமல் பிளானெட் நிறுவனத்திற்காகவும் தயாரித்துள்ளார். இந்தியாவில் வனவிலங்குகள் குறித்த படத்தயாரிப்பில் 4000 பிக்சல் அளவில் படப்பிடிப்பு செய்வதை முதல்முறையாக பயன்படுத்தியவர் திரு சுப்பையா நல்லமுத்து என்பது குறிப்பிடத்தக்கது.

ஐந்து தேசிய திரைப்பட விருதுகள் உட்பட ஏராளமான தேசிய மற்றும் சர்வதேச விருதுகளை இவர் பெற்றுள்ளார். ஜாக்சன் ஹோல் வனவலங்கு திரைப்பட விழாவில் தொடர்ந்து நடுவராக இருந்து வருபவர். மேலும் இந்திய பனோரமா திரைப்பட விழாவில் (2021) நடுவர் குழு தலைவராகவும் பணியாற்றியவர்.

வி சாந்தாராம் வாழ்நாள் சாதனையாளர் விருது பற்றி மும்பை சர்வதேச திரைப்பட விழாவில் ஒவ்வொரு முறையும், ஆவணப்படங்களுக்கு சிறந்த பங்களிப்பு செய்வதோடு, இந்தியாவில் அதன் வளர்ச்சிக்குப் பாடுபடுகின்ற திரைப்படத் தயாரிப்பாளர் ஒருவருக்கு கௌரவம் மிக்க டாக்டர் வி சாந்தாராம் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படுகிறது. இது 10 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசையும், கோப்பையையும், பாராட்டுப் பத்திரத்தையும் கொண்டதாகும். ஷியாம் பெனகல், விஜயா முலே உள்ளிட்ட பிரபல திரைப்படத் தயாரிப்பார்கள் முந்தைய ஆண்டுகளில் இந்த விருதினைப் பெற்றுள்ளனர். பழமை வாய்ந்த திரைப்படத் தயாரிப்பாளர் M சாந்தாராம் நினைவாக இந்த விருது நிறுவப்பட்டுள்ளது.

- தமிழ்மணி

# ஃபிலிப்கார்ட் மற்றும் இந்திய பொம்மைகள் உற்பத்தி தொழில் துறையுடன் இணைந்து பயிலரங்கு நடத்தப்பட்டது

இந்தியாவில் வளர்ந்து வரும் பொம்மைகள் உற்பத்தி தொழில் துறைக்கு உத்வேகம் அளிக்கும் வகையில், புதுதில்லியில் இன்று, தொழில் மேம்பாடு மற்றும் உள்நாட்டு வர்த்தகத்துறை, ஃபிலிப்கார்ட் மற்றும் இந்திய பொம்மைகள் உற்பத்தித் துறையுடன் இணைந்து பயிலரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தது. பொம்மைகள் தொழில்துறையை மேலும் வளர்ப்பது, உள்நாட்டு பயன்பாட்டை அதிகரிப்பது, பணியாளர்களுக்கு திறன் மேம்பாடு/ மறுதிறன் அளிப்பது ஆகியவற்றுக்காக இந்தப் பயிலரங்கு நடத்தப்பட்டது.

இந்தப் பயிலரங்கில் உரையாற்றிய தொழில் மேம்பாடு மற்றும் உள்நாட்டு வர்த்தகத்துறை செயலாளர் திரு ராஜேஷ்குமார் சிங், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பொம்மைகளுக்கு உலகளாவிய சந்தையை உருவாக்கும் தொலைதூர நோக்கத்துடன் பொம்மைகள் உற்பத்தி தொழில் துறைக்கான சிறந்த சூழலை உருவாக்கும் வலுவான



உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக இந்தப் பயிலரங்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாக கூறினார்.

இந்திய பொம்மைகள் உற்பத்தித் தொழில்துறை அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, நெதர்லாந்து, டென்மார்க், சீனா உட்பட 100-க்கும் அதிகமான நாடுகளில் சந்தையை விரிவுபடுத்தியிருப்பதாக தொழில் மேம்பாடு மற்றும் உள்நாட்டு வர்த்தகத்துறை இணைச்செயலாளர் திரு சஞ்சீவ் தெரிவித்தார். இணையதள வசதிகளை பயன்படுத்தி சர்வதேச பயன்பாட்டாளர்களை அடைவது பொம்மைகள் உற்பத்தி தொழில்துறையின் அடுத்தக்கட்ட நடவடிக்கை என்றும் அவர் கூறினார்.

- பி.ஸ்டாலின்

# வாஞ்சிநாதன் அவர்களின் 113-வது நினைவு அஞ்சலி



வாஞ்சிநாதன் அவர்களின் 113-வது நினைவு நாளில் அஞ்சலி செலுத்தப்பட்டது. பண்பாட்டு பேரவை அமைப்பு இந்த அஞ்சலியை ஏற்பாடு செய்திருந்தது. வாஞ்சிநாதன் பற்றி அதிகம் தெரிந்துவிடாத பெண்கள் மத்தியில், அவரை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதும் முக்கியமான நோக்கம். அந்த வகையில் இந்த சிறு கூட்டம் முதல் படியாக அமைந்தது என்றே கொள்ளலாம்.

கலந்து கொண்ட முக்கியமான உறுப்பினர்களும் பேச்சாளர்களும்:

திரு. கிருஷ்ணா ABGP, திரு.K.சுரேஷ், மேற்கு மாம்பலம், திரு.சந்திரசேகர நாடார், மேற்கு மாம்பலம், திருமதி பத்மா, தாளாளர், சிஷ்யா பள்ளி,கோடம்பாக்கம், திரு.N.சுரேஷ் மாம்பலம், திரு.விஜயகுமார், வளசரவாக்கம், திருமதி பூமா குமாரி, அமைப்பாளர், பண்பாட்டு பேரவை, பானுமதி மோஹன், சூளைமேடு, திருமதி.தீபா, கோடம்பாக்கம், திருமதி. சுபலக்ஷ்மி, கோடம்பாக்கம், திருமதி. பாரதி நுங்கம்பாக்கம், திருமதி தேவகி, நுங்கம்பாக்கம், மற்றும் பலர் பங்கேற்றனர்.

- K. அழகர்சாமி


தீப்ஷிகா
ஆட்டோ ஒர்க்ஸ்
அனைத்து இருசக்கர வாகனங்களும் சரிபார்க்கப்படும்
All kind of bike service and care
Engine Re - work
High Quality
Engine Oil
Refill and Maintance
100 % Genuine Parts
used for your bike
Air Filling
Tyre Puncher
Tube & Tube less
Respect Service
PRICE
QUALITY
SERVICE
Deepshika Auto Works
# 3/896, Pillaiyar Kovil Street, Mettukuppam, Chennai - 600097.
9884166636, 7010399368

**PENA KURAL,** Tamil Monthly - June 2024
Registrar of Newspapers for India - Registered No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR**
Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.**
Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.**
Editor: **RATHIKA S**

